Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 18 திங்கட்கிழமை (04-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:314

## புலிகளின் உயர்மட்டக் குழு சொல்ஹெய்முடன் பேச்சு!

ஜெனீவா,ஒக்.4

சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயத்தில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேத் தரப்பின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்முடன் நேற்றுப் பகல் நீண்ட நேரம் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மதியுரைஞர் பாலசிங்கம் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவினரே நேற்றுக் காலை ஜெனீவாவுக்கு வந்து சேர்ந்த எரிக் சொல்ஹெய்மோடு விரிவான பேச்சுக்களை நடத்தினர்.

கடந்த வெள்ளியும், சனியும் ஜெனீவாவில் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து வகுக்கப்பட்ட உத்தி மற்றும் தீர்மானங்களுக்கு அமைய இப்பேச்சுக்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

அனுசரணைக் குழுவில் இடம்பெறும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இன்று ஜெனீவாவிற்கு வருவார் என்றும் அவருடனும் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் பேச்சு நடத்துவர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

புலிகளின் அரசியல்குழுவின் கூட்டத் தீர்மானங்கள் பற்றி பத்திரிகையாளர்களுக்குத்

(14ஆம் பக்கம் பார்க்க)



சொல்ஹெய்முக்கும் புலிகளின் உயர்மட்டக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பின்போது...

# புலிகள் நிராகரித்த யோசனையின் அடிப்படையில் எப்படிப் பேசுவது?

## ரணிலுக்கு எழுதிய கடிதத்தில் சந்திரிகா கேள்வி

கொழும்பு,ஒக்ரோபர்4

இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படும் சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான தேசியக் கவுன்ஸிலின் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்ற ஐ.தே.கட்சியின் முடிவை மீளாய்வு செய்யும்படி கோரியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன்னைய ஐ.தே.மு.அரசும் தற்போது புலிகளும் முன்வைத்துள்ள இருதரப்பு யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கும்படி ரணில் குறிப்பிட்டிருப்பதை இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி முன்னைய அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகளைத் தாங்கள் முற்றாக நிராகரிக்கிறார்கள் எனப் புலிகள் திட்டவட்டமாகவும் திரும்பத் திரும்பவும் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் அதனையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பது எப்படி என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

ஜனாதிபதியின் கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:

செப்ரெம்பர் 24ஆம் திகதியிட்டு நீங்கள் அனுப்பிய கடிதம் ஜனாதிபதி செயலகத்திற்கு 27ஆம் திகதி கிடைத்தது. அதற்காக எனது நன்றி.

ஒக்ரோபர் 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான கவுன்ஸிலின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு நீங்களும் உங்கள் கட்சியினரும் பிரசன்னம் தரமாட்டீர்கள் என்பதை அறிந்து நானும் எனது அரசும் அதிருப்தி அடைந்துள்ளோம்.

இந்த துரதிர்ஷ்டமான முடிவுக்கு நீங்கள் சமர்ப்பித்துள்ள காரணத்தை என்னால் புரிந்துகொள்ளமுடியாதிருக்கின்றது. பின்வரும் கார

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகளுக்காக ஹெலி பறந்த செலவு ரூ.15கோடி

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சமாதானப் பேச்சுகளின் நிமித்தம் ஸ்ரீலங்கா விமானப் படையினருக்கு 15கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விமானப்படை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளின் பிரதிநிதிகள், அரசுப் பிரதிநிதிகள், சமாதானத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் எனப் பலதரப்பட்டவர்களையும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகப் பல இடங்களுக்கும் ஏற்றிச் சென்றவரையிலேயே இந்தச் செலவு ஏற்பட்டுள்ளதாக விமானப்படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

விமானப் படையினரின் ஹெலிகளில் ஒரு மணித்தியாலப் பயணத்திற்கு ஒரு லட்சத்து 15ஆயிரம் ரூபா செலவாகிறது என மதிப்பிடப்படுகின்றது. இதன் அடிப்படையில் சமாதான முன்னெடுப்புகளுக்காக இதுவரை ஸ்ரீலங்கா விமானப் படையினரின் ஹெலிகள் சுமார்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கொழும்பில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் இன்றுகாலை இசுறுபாயவில் உள்ள கல்வியமைச்சின் முன்பாக கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு மேற்படி ஆசிரியர் சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை கொண்டாடப்படவுள்ள ஆசிரியர் தினத்தை பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கரிநாளாக அனுஷ்டிக்கவுள்ளனர் என்றும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## எதிர்க்கட்சிகள் அனைத்தும் நிராகரித்த நிலையில் சமாதான ஆலோசனைச் சபைக் கூட்டம் இன்று

### அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமே பங்குபற்றுகின்றன

கொழும்பு,ஒக்.4

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட தேசிய சமாதான ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டம், எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாக அதனை நிராகரித்துவிட்ட நிலையில் இன்று நடக்கவுள்ளது.

புலிகளுடனான சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்துக் கட்சிகளுடனும் பேசி அவற்றின் ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஜனாதிபதி இந்த ஆலோசனைச் சபையை அமைத்தார். அதன் முதலாவது கூட்டம் இன்று நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளையும் கலந்துகொள்ளுமாறு இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துவிட்டது.

இந்த நிலையில் ஜே.வி.பி., பேரியல் அஷ்ரப்பின் 'நுஆ', அமைச்சர் அதாவுல்லாவின் கட்சி மற்றும் இடதுசாரிக்கட்சிகள் உட்பட அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தாம் தயார் என்று ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. எனவே இது தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் பேசுவது நேரத்தைக் கடத்தும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் அமைக்கும் தேசிய ஆலோசனைச் சபை காலத்தை இழுத்தடித்து யுத்தத்துக்கு இட்டுச்செல்லும்

### எச்சரிக்கிறார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.4

அரசு அமைக்க உத்தேசித்துள்ள சமாதானத்திற்கும், நல்லெண்ணத்துக்குமான ஆலோசனைக் கவுன்ஸிலானது, காலத்தை இழுத்தடித்து இராணுவ சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பாரிய யுத்தத்திற்கும் இட்டுச் செல்லும் செயற்பாடாகும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு நேற்றுக் காலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தப் பிரியர்கள் அல்லர். அவர்கள் என்றும் சமாதானத்தையே விரும்புகின்றவர்கள். இதனை எமது தேசியத் தலைவர் சர்வதேச நாடுகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. எம்.பிக்கு கொலை அச்சுறுத்தல்

மட்டக்களப்பு,ஒக்.4

மட்டக்களப்பு மாவட்டத்தின் மற்றொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரனுக்கும் தொலைபேசி ஊடாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அச்சுறுத்தல் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் கிரான் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில்

(14ஆம் பக்கம் பார்க்க)








யாழ். மாவட்ட மகளிர் சங்கம நிகழ்வு நேற்றுக்காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது பொதுச்சுடரினை யாழ். மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும் தமிழீழத் தேசியக் கொடியினை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் 2ஆம் லெப். மாலதியின் உருவப்படத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மலர்மாலை அணிவிப்பதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்:தீபன்)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். மாவட்ட பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் செயலமர்வு இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தால் முதற்றடவையாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெற்று நேற்றுப் பூர்த்தியடைந்தது.

மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்வாங்கப்பட்டு இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. செயலமர்வின் வளவாளர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான அ.சண்முகதாஸ், கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.யோகராஜா, யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.விசாகரூபன், மட்டு வின்சன்ட் மகளிர் கல்லூரி ஆசிரியை த.யுவராஜன், கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த எஸ்.கணேசலிங்கம். தமிழ்த்துறை வளவாளர்களான தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறைப் பணிப்பாளர் தை.தனராஜ், தேசிய கல்வி நிறுவனத்தின் பிரதம செயற்றிட்ட அதிகாரி செல்வி பு.நாகலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உயர்தரத்தில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் மொழித்திறனை மேம்படுத்துவது, வகுப்பறைச் செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுதல் மற்றும் உயர்தரத்தில் சித்தியடையும் தமிழ்மொழிமூல மாணவர்களின் தரத்தை உயர்த்துவது போன்றவை தொடர்பாக ஆசிரியர்களுக்கு இச்செயலமர்வில் விளக்கம் அளிக்கப்பட்டது. (3-7)

## பொலீஸ்மா அதிபர் இன்று பதவியேற்பு

கொழும்பு,ஒக்.4

புதிய பொலீஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ பதவியேற்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் பதவியேற்கவிருந்தபோதும் அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கத் தாமதமான காரணத்தால் அந்தப் பதவியேற்பு வைபவம் பின்போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை பிரதிப் பொலீஸ்மா அதிபராக இருந்து வந்த சந்திரா பெர்னாண்டோவை பொலீஸ்மா அதிபராக நியமிக்கும் கடிதம் வெள்ளியன்று மாலை ஜனாதிபதியிடமிருந்து அவருக்குக் கிடைத்ததையடுத்து இன்று காலை 10 மணிக்கு அவர் புதிய பொலீஸ்மா அதிபராகப் பதவியேற்பார் என்று கூறப்பட்டது. (க)

# சாகித்திய விருதுகள் வழங்கும் வைபவம் நாளை கொழும்பில்!

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு 'சாகித்திய ரத்ன' கௌரவம்



கொழும்பு,ஒக்.4

இவ்வாண்டுக்கான தேசிய சாகித்திய பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 3மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கவிருக்கிறார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் ஊடாகக் கலை, இலக்கிய கலாசார துறைகளில் சேவையாற்றிய மூன்று துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு விசேட கௌரவிப்பாக 'சாகித்திய ரத்ன' விருது வழங்கப்படவுள்ளது.

தமிழ்மொழிக்காக பேராசிரியர் க.சிவத்தம்பிக்கும், சிங்கள மொழிக்காக ஜயதேவ திலகசிறிக்கும், ஆங்கில மொழிக்காக ரெஜி சிறிவர்த்தனவுக்கும் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு 'சாகித்திய ரத்ன' விருதுடன் 50 ஆயிரம் ரூபா பொற்கிழியும் வழங்கப்படும்.

தமிழ் இலக்கியத்துறைக்கான விருதுகள் பெறுவதற்கு கீழ்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★ முல்லை முஸ்ரிபா - கவிதை - 'இருத்தலுக்கான அழைப்பு'

★ எஸ்.முருகானந்தன் - சிறுகதை - 'தரை மீன்கள்'

★ கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) - நாவல் - 'வானும் கனல் சொரியும்'

★ ஓ.கே.குணநாதன் - சிறுவர் இலக்கியம் - 'வெள்ளைக் குதிரை'

★ கி.மு.சிவலிங்கம் - ஆங்கில மொழிமூல நூல் மொழிபெயர்ப்பு - 'சி.வி.வேலுப்பிள்ளையின் தேயிலை தேசம்'

★ சாரல் நாடன் - மொழி ஆய்வுநூல் - 'மலையகத் தமிழர் வரலாறு'

★ அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை - நூல் - 'மின்னியக்கப் பத்திரிகையில் ஓர் அறிமுகம்'. (3-202)

# மன்னாரில் முஸ்லிம் நபர் சுடப்பட்ட இடத்தில் 60லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு!

## கொலைக்கும், போதைப்பொருள் கடத்தலுக்கும் தொடர்பா?

கொழும்பு,ஒக்.4

கடந்த வியாழக்கிழமை இரவு மன்னார் ஓலைத்தொடுவாய் என்ற இடத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த முஸ்லிம் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்துக்கு அண்மித்த பற்றைக்குள் இருந்து சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் மன்னார் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை அப்பகுதியில் பொலீஸார் சோதனையிட்டுக் கொண்டிருந்த போது பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் ஆயிரத்து 700 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7மணியளவில் மன்னார் கரிசல் கிராமத்தைச் சேர்ந்த வான் சாரதியான ஸ்மாயில் சமீம்(வயது36) என்ற இளைஞர் இனந்தெரியாதோரின் சூட்டில் உயிரிழந்தார். அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பதுர்தீன் என்ற மற்றோர் இளைஞர் படுகாயமுற்றார். இச்சம்பவம் காரணமாக மன்னார் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் அடித்துநொறுக்கப்பட்டன. மன்னார் நகரம் அல்லோலகல்லோலப்பட்டது; பொலீஸ் ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது.

நிலைமை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

இதனையடுத்து, குறிப்பிட்ட இளைஞர் கொல்லப்பட்ட இடத்தைச் சுற்றிப் பொலீஸார் விசாரணையின் பொருட்டு நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அச்சமயம் சந்தேகத்துக்கு இடமான பொதியொன்று பற்றைக்குள் இருப்பதை பொலீஸார் கண்டனர். அதனை அவர்கள் பரிசோதித்துப் பார்த்தபோதே அதற்குள் ஹெரோயின் போதைப்பொருள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

அண்மைக் காலமாக பெருந்தொகையான ஹெரோயின் போதைப் பொருள் இந்தியாவிலிருந்து மன்னார் கடற்பகுதி ஊடாக இலங்கைக்கு கடத்திவரப்படுவதாகப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்து வந்தனர்.

மன்னார், தலைமன்னார், பேசாலை போன்ற பகுதிகளில் வைத்துப் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பல நபர்களை பெருந்தொகையான ஹெரோயின் போதைப் பொருள்களுடன் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்குள் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலுக்கு பிரதான தளமாக மன்னார் விளங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபர் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் இவ்வளவு பெறுமதியான ஹெரோயின் கண்டெடுக்கப்பட்டிருப்பதால் இந்த நபர் சுடப்பட்டதற்கும் போதைப்பொருள் கடத்தலுக்கும் ஏதேனும் தொடர்புண்டா என்ற கோணத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நான்கு ஆலயங்களிலும் ஒரு வீட்டிலும் மழைநேரத்தில் திருடர்கள் கைவரிசை

கோண்டாவில்,ஒக்.4

நள்ளிரவு வேளையில் நான்கு ஆலயங்களிலும் ஒரு வீட்டிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கோண்டாவில் வடக்கில் உள்ள தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயம், கோண்டாவில் எம்.எஸ்.லேன் பகுதியில் உள்ள ஞான வைரவர் ஆலயம், கோண்டாவில் கிழக்கில் உள்ள பாதாள வைரவர் ஆலயம் மற்றும் இணுவில் பரித்தியடைப்புப் பகுதியில் அமைந்துள்ள செகராசப்பிள்ளையார் ஆலயம், கோண்டாவில் மேற்கு, நெட்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்று ஆகியவற்றிலேயே இத்திருட்டுச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயத்தில் மூலஸ்தான அம்மன் விக்கிரகம் அகற்றப்பட்டு அதன் பீடத்தில் உள்ள தங்கம் கலந்த இயந்திரத் தகடு, இரத்தினக் கற்கள், தங்கத்தகடு பொருத்தப்பட்ட வலம்புரிச் சங்கு. சீடி. பிளேயர், உண்டியலில் இருந்த பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

பாதாள வைரவர், ஞானவைரவர் ஆலயங்களில் மூலஸ்தான விக்கிரகங்கள் சரிக்கப்பட்டிருந்ததுடன் அவை சிதைக்கப்பட்டுமுள்ளன.

இந்த ஆலயங்களில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. இணுவில் செகராசப்பிள்ளையார் ஆலயத்தில் 150 வருடங்கள் பழைமைவாய்ந்த ஐம்பொன்னால் ஆன எழுநதருளி விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன.

கோண்டாவில் மேற்கு நெட்டிலிப்பாய் பகுதியில் உள்ள ஐயம்பிள்ளை தங்கநாயகி என்பவருடைய வீட்டில் இரண்டரைப் பவுண் சங்கிலி. ஒரு சோடி தோடு, இரண்டு கைத்தொலைபேசிகள், பணம் என்பவற்றோடு கடவுச்சீட்டு, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் உடுபுடைவைகள் அடங்கிய பெரிய சூட்கேஸ் ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் யாவும் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையின் போதே இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (10-49)

## இடி தாக்கியதால் மின் உபகரணங்கள் சேதம்!

வலி.வடக்கு,ஒக்.4

இடிதாக்கியதால் வீட்டின் மின் இணைப்புகள் உட்பட மின்சார உபகரணங்களும் எரிந்து சேதமடைந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் மல்லாகம் அல்லாரை வீரபத்திரர் கோயிலுக்கு அருகில் உள்ள பாலசுப்பிரமணியம் என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு மின் இணைப்புக்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, றேடியோ உட்பட சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து சேதமாகியுள்ளன. (10-86)

உதயன்

# இழுத்தடிப்புக்களை இன்றோடு நிறுத்துக!

இனப்பிச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான ஆலோசனைக்ளைப் பெறுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட்டியுள்ள 'சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின்' முதலாவது கூட்டம் இன்று நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதே ஒரேவழி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அதாவது, தமிழர்களின் ஏக -அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான புலிகளோடு அரசுத்தரப்பு சமாதான முயற்சிகளை - அமைதிப் பேச்சுக்களை - தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுதான் தற்போதைய சமாதான முயற்சிகளைத் துணிவோடு ஆரம்பித்தது. ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட கட்டுமட்டில்லாத அதிகாரத்தின் மூலம் அந்த அரசை நான்கு ஆண்டுகள் முந்தியே வீட்டுக்கு அனுப்பி, தனது பேரினவாதக் கூட்டை அந்த இடத்தில் ஆட்சிக்கு அமர்த்தியத்தின் மூலம் அந்த அமைதி முயற்சிகளை நாசமாக்கினார்.

விட்ட இடத்திலிருந்து சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதை விடுத்து, இப்போது காலத்தை இழுத்தடிக்கும் உத்தியாக சாமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் 'கவுன்ஸில்' என்று அவர் புதிய கதை விடுகிறார் என இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம்.

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் விடயத்தில் தென்னிலங்கைத் தரப்பில் அல்ல - சிங்களவர் தரப்பில் அல்ல - முதலில் ஆளும் கட்சித் தரப்பில் தான் இணக்கமும் உடன்பாடும் காணப்படவேண்டும் என்றும் -

இது விடயத்தில் தனது அணிக்குள் உடன்பாட்டை எட்ட முடியாத ஜனாதிபதி, தேசியமட்ட உடன்பாடு என்று மக்களின் காதில் பூச்சுற்ற முயல்கின்றார் என்றும்-

இப்பத்தியில் விளக்கமாக விவரித்திருந்தோம்.

அமைதிப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கும்படி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியும், ஏனைய தமிழ்க்கட்சிகளும் வற்புறுத்தியிருப்பதால் அதை எதிர்த் தரப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு அமைதிமுயற்சிகளை ஜனாதிபதி தாமதமின்றி ஆரம்பிக்கவேண்டும் என்றும் கோரியிருந்தோம்.

நாம் குறிப்பிட்டது போல கடைசியாக, ஜனாதிபதி இன்று கூட்டியுள்ள ஆலோசனைக் கவுன்ஸில் கூட்டம் அவரது அணிக்குள் ஒரு தீர்மானத்தை எடுக்கும் கூட்டமாகத்தான் முடியப்போகின்றது போல் தென்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம் - ஐ.தே.முன்னணி, தமிழ்க் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்றவை எல்லாம் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றப் போவதில்லை என்பது தெளிவு.

மற்றோர் எதிர்க்கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும பங்குபற்றாது எனத் தெரிவிக்கும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆளும் தரப்பிற்கு அண்மையில் 'பல்டி' அடித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கூட இன்றைய கூட்டத்திற்குப் போகாது என்றே கூறப்படுகின்றது.

ஆக, ஆளும்கட்சித் தரப்பினர் மட்டுமே அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் இன்றை தேசிய ஆலோசனைக் கூட்டத்திற்குச் செல்லப் போகின்றார்கள்.

எனவே, தனது காலத்தை இழுத்தடிக்கும் நாடகத்தல் பங்கேற்க எதிர்க்கட்சியினர் மறுத்துவிட்டதால் தனது அணியினரை மாத்திரம் வைத்துக்கொண்டு நாடகத்தை ஒப்பேற்ற வேண்டிய இக்கட்டு ஜனாதிபதிக்கு.

தமது அரசுத் தரப்புக் கூட்டமைப்பின் கட்சிகள் மட்டும்தான் அரசியல் கட்சிகள் என்றரீதியில் இன்றைய கூட் டத்தில் பங்குபற்றும் என்றால், அதற்கு இவ்வளவு ஆரவார ஏற்பாடும், கால இழுத்தடிப்பும், தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் என்ற பெயரும் தேவையற்றவை என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

விறுவிறுவென்று தமது அரசின் கூட்டமைப்புக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, தாம் கையாளப்போகும் உத்தியை வகுத்து, அது தொடர்பாக எதிரணியினரின் கருத்தை ஒருபுறம் கோரிக்கொண்டு, மறுபுறத்தில் அமைதிப் பேச்சுக்களை அந்த வழியில் தாமதமின்றி முன்னெடுப்பதுதான் ஜனாதிபதியைப் பொறுத்தவரை நியாயமான - பல தரப்புக்கும் நீதி சொல்லக்கூடிய - ஒழுங்கு முறையான - செயற்பாடாக இருக்கும்.

தமது நிறைவேற்று அதிகார ஆட்சிக்காலம் இன்னும் 13 மாத காலம்தான் என்ற யதார்த்தத்தை உணர்ந்து, அக்காலத்துக்குள் அமைதி முயற்சியை ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்த்தவேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க கருதுவாரேயானால், அவர் இனிமேலும் இழுத்தடிப்புத் தாமதங்களைச் செய்யாமல், விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பயனற்ற ஆலோசனைக் கவுன்ஸில் ஏற்பாடுகளை இன்றோடு முடித்துக்கொள்வது மிகவும் நல்லது.

# புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான கல்வி அமைச்சின் புதிய நடைமுறை

கொழும்பு,ஒக்.4

2005ஆம் ஆண்டில் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்படவிருக்கும் மாணவ, மாணவிகளின் தற்காலிகப் பெயர்ப் பட்டியல் பாடசாலைகளின் அறிவித்தல் பலகைகளில் தற்பொழுது காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இப்பெயர்ப்பட்டியல் 14 நாள்களுக்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். அதற்கான திகதிகள் அந்தந்த பாடசாலைகளில் தீர்மானிக்கப்படும்.

தற்காலிக பட்டியல் தொடர்பாக ஆட்சேபம் தெரிவிக்க விரும்பும் பெற்றோர் குறித்த 14 நாள்களுக்குள் அவ்வாறு ஆட்சேபம் செய்யலாம். ஒவ்வொரு முறைப்பாடும் ஒரு சுயேச்சை நடுவர் குழுவினால் விசாரிக்கப்படும்.

தேசியப் பாடசாலைகள் தொடர்பான இந்த விசாரணைகளைக் கல்வி அமைச்சு கண்காணிக்கும். மாகாணப் பாடசாலைகள் தொடர்பான விசாரணைகள் மாகாண அதிகாரிகளால் கண்காணிக்கப்படும்.

2004 நவம்பர் 15ஆம் திகதியளவில் சகல விசாரணைகளும் முற்றுப்பெற்றுவிடும். தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு பாடசாலையிலும் காட்சிக்கு வைக்கப்படும்.

ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர், தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதை முறைப்பாட்டாளர் நிரூபிக்க முடியுமானால் கல்வி அமைச்சின், மேன்முறையீட்டு ஆணையாளருக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்க முடியும். இது விசாரணை முடிந்த இரண்டு வாரங்களுக்குள் செய்யப்படவேண்டும். 2005ஆம் ஆண்டில் அனுமதிக்கபபடும் புதிய மாணவர்களின் பட்டியல் ஜனவரி 15ஆம் திகதிக்குமுன் பாடசாலைகளில் வைக்கப் பட்டிருக்கும். (ப)

# யாழ். மத்திய கல்லூரியின் கட்டமைப்புக்குப் பாராட்டு!

அச்சுவேலி,ஒக்.4

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளகக் கட்டமைப்புக்குத் தேசிய கல்லூரிகளின் கல்விப் பணிப்பாளர் லியனகே பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள 324 தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாநாடு இம்மாதம் முதலாம் திகதி கல்வி அமைச்சில் அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டீ மெல் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் கலந்துகொண்ட தேசிய கல்லூரிப் பணிப்பாளர் யாழ். மத்திய கல்லூரியின் பூந்தோட்டம், விஞ்ஞான ஆய்வுகூடம், மாநாட்டு மண்டபம், அலுவலகம், கணனிக்கூடம் என்பவற்றின் அமைப்புமுறை சிறப்பாக இருப்பதாகக் குறிப்பிட்டு அதிபருக்குப் பாராட்டுத் தெரிவித்ததோடு,

யாழ். மத்திய கல்லூரியின் உட்கட்டமைப்புமுறைகளை ஏனைய கல்லூரி அதிபர்கள் நேரடியாகப் பார்வையிட்டு தமது கல்லூரிகளிலும் பின்பற்றி கல்லூரியைக் கவர்ச்சிகரமாக மாற்றி அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.(4-11)





'கண்ணீர்ப் பயணங்கள்' என்ற நூலின் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கள் நூலை வெளியிட்டு வைக்க யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில் அதனைப் பெற்றுக் கொள்வதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம், *(படங்கள்: தென்மராட்சிச் செய்தியாளர்)*

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை முதலாம் வருட கலைப் பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. மேற்படி மாணவர்களுக்கான முகாமைத்துவமும் முயற்சியாண்மைத்திறன்களும் (AMEA 11011) சமூக நல்லிணக்கமும் தொடர்பாடல் திறன்களும் (Acsa 11012) ஆகிய பரீட்சைகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (4-204)

# சுன்னாகம் நகரின் சுற்றாடலை சுத்தமாகப் பேண நடவடிக்கை

வலி.தெற்கு,ஒக்.4

சுன்னாகம் நகரத்தையும் அதன் சுற்றாடலையும் சுத்தகமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதில் வலி.தெற்கு பிரதேச சபையும், பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் அழுக்குகளில் இருந்து நுளம்புகள் பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் மக்களுக்கு நோய்கள் பீடிக்காதிருப்பதற்கும் ஏற்ற சுகாதார நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி.தெற்கு பிரதேச சபை இதற்கென விசேடமாக 15 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

குறிப்பாக, சுன்னாகம் மத்திய மீன் சந்தையில் இருந்து சுன்னாகம் நகரூடாகக் கந்தரோடை வயல்வெளிவரை சென்றடையும் வடிகால்கள் சுத்தம் செய்யப்பட்டு திருத்தவேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

வடிகால்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் திருத்தம் செய்யப்பட்டு கழிவு நீர் இலகுவாகப் பாய்ந்து செல்லக்கூடிய முறையில் புனரமைக்கப்பட்டும், வடிகாலில்சேரும் கழிவுப் பொருள்கள் தினமும் அகற்றப்பட்டும் வருகின்றன.

அதேசமயம், மேற்படி வடிகாலை முற்றாகச் சீரமைத்துப் புனரமைப்புச் செய்வதாக இருந்தால் 2 கோடிக்கு மேல் நிதி தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-152)

# மாலதியின் நினைவுதின நிகழ்வுகள் கிளிநொச்சியில் நாளை ஆரம்பம்

கிளிநொச்சி,ஒக்.4

இரண்டாம் லெப்.மாலதியின் நினைவு நாளும், தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமும் எதிர்வரும் 10ஆம் திகதி தமிழர்தாயகமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப் படவிருக்கிறது. இதனை முன்னிட்டு நாளை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை காலை 9மணிமுதல் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக்காட்டுகின்ற படைக்கலக் காட்சிகள், போர்க்கருவிகள், உற்பத்திச்சாலை, விடியல் படைவீடு, இராணுவ மருத்துவமனை, சண்டைக் காட்சிகள் உட்படப் பல சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

துப்பாக்கிச் சூட்டு போட்டிகள் விளையாட்டுப்போட்டிகள், 2ஆம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான மகளிர் உதைபந்தாட்டப் போட்டிகள் என்பனவும் நடைபெறும்.

தொடர்ந்து தமிழீழத்தின் முன்னணி இசைக் கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் இசை நிகழ்வும் நடைபெறும். (4-204)

## நாளை

புரட்டாதி 19
செவ்வாய்க்கிழமை
(05.10.2004)
திதி : ஸப்தமி
பின்னிரவு 2.08 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பிற்பகல் 2.18
சுபநேரம்: 10.32 - 12.02
ராகுகாலம்: 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

# அடுத்தடுத்து இரு தினங்கள் ஒரே கடையில் திருட்டு!

மட்டுவில் மகாவித்தியாலய சந்தியில் உள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்று அடுத்தடுத்து இரண்டு நாள்கள் திருடர்களின் கைவிசைக்கு இலக்கானது.

கடந்த புதன்கிழமையும், வியாழக்கிழமையும் இந்தக் கடையில் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டிருக்கின்றன.

கடந்த புதன் இரவு வீதிகளில் ஆள்களின் நடமாட்டத்தைக் கவனித்துச் சென்றிகள் அமைத்து - ஓட்டைப்பிரித்து உள்ளே இறங்கி திருடியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருடர்கள் தாம் திருடிய பொருள்களை அதிகாலையில் நுணாவில் சந்தியில் உள்ள கடை ஒன்றில் கொடுத்துவிட்டு மறுநாள் எடுப்பதாகக் கூறிச்சென்றனர் என்றும் பின்னர் அவர்கள் அங்கு வரவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கடைச் சொந்தக்காரர்கள் இத் திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோது நுணாவில் சந்தியில் பொலீஸ் நிலையத்திற்கு அருகில் திருட்டுப் பொருள்கள் இருப்பது தெரியவந்தது.

இதே கடையில் மீண்டும் மறுநாள் முன் கதவுகள் உடைத்து புகுந்த திருடர்குழு, அங்கு மீதியாகக் காணப்பட்ட பொருள்களையும் பெற்றோலையும் அபகரித்துக்கொண்டு கண்டிவீதியால் சென்றுகொண்டிருந்தவேளை சாவகச்சேரிப் பொலீஸாரிடம் சிக்கிக்கொண்டது.

எனினும், முதல்நாள் அதே கடையில் இடம்பெற்ற திருட்டுடன தாம் தொடர்பு படவில்லை என்று அவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர். (4-31)

## உதயவாக்கு

மனிதனை மேன்மையாக்குவது வெற்றிக்குரிய நேரமல்ல, சோதனைக்குரிய நேரம்.

## சர்வதேச சதுரங்கப் போட்டி: வேம்படி மாணவி தெரிவு!

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஒருவர் சர்வ தேசரீதியில் நடைபெறும் சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்வதற் காக கிறீஸ் நாட்டிற்குச் செல்கின்றார்.

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனம் பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்திய சதுரங்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத தைப் பெற்ற செல்வி சிவகுருநாதன் வித்தியாரணி என்ற உயர்தர கணிதப்பிரிவு மாணவியே இவ்வாறு கிறீஸ் நாட்டுக்குச் செல்கிறார். யாழ்.மாவட்டத்தில் இருந்து முதல்முதலாகச் சர்வதேச மட்டத்தில் நடை பெறும் சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்வதற்காகச் செல்பவர் இவரேஆவார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 05 02 1942



உதிர்வு 04 09 2004

திருமதி

### கந்தசாமி ராஜேஸ்வரி

**(மணியம்மா)**

காலஞ்சென்ற கந்தசாமித்துரை (வடிவேல் தண்டையல்) அவர்களின் அன்பு மனைவி

**இன்று (04.10.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*குச்சம் ஒழுங்கை,வல்வெட்டித்துறை.*
தகவல்:
மருமகன்: **வண்ணக்கிளி** (37102)(24-34-14)

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரங்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7403723 முதல் 7414997 வரை
சீட்டிழுப்பு இல. 72 திகதி 30-09-2004

வெற்றி எண்கள் **9 1 8 5 9 2** சுப்பர் எண் **17**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,02,65,225/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,05,45,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 5,000/- | 5,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,005 | 500/- | 5,02,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,067 | 50/- | 5,03,350/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 99,736 | 10/- | 9,97,360/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 97 | 1,000/- | 97,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,010 | 100/- | 101,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,984 | 20/- | 1,99,680/- |
| மொத்தம் | 1,22,022 | | 54,10,890/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 54,10,890/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,08,25,300/-**

தொடர் இல. 6445921 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 04 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செந்த் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7404950-9-55
7410649-4-75
7411170-7-81
7405674-0-75
7413692-8-09


## கணனிப் பயிற்சிக்கு எழுவர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.4

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் கணனிப் பயிற்சி பெறுவதற்காக 7பேர் தெரிவுசெய் யப்பட்டுள்ளனர்.

ஆ.ரூபகாந்தன், ஞா.ஞானராணி, திருமதி யோ.அருட்செல்வம், திருமதி. ச.இரவீந்திரன், திருமதி வி.பாலசுப்பிரமணியம், வி.இரவீந்தி ரன், திருமதி கே.வெண்ணிலா ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டவர்களாவர். (3-204)

## எல்லைப்படை மாவீரர் நினைவாக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்தமாகத் தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் இரண்டாவது உதைப்பந்தாட் டச் சுற்றுப்போட்டி மிகவிரைவில் நடைபெற வுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தத்தமது உதைபந்தாட்ட லீக்குகளூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் கேட்டுள்ளார். (3-5)

## ஆங்கில பயிற்சி விரைவில் ஆரம்பம்

தென்மராட்சி,ஒக்.4

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தினர் பயிற்சி நெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

சிறுவர், சிறுமிகள், பாடசாலை செல்வோர், பல்கலைகழகம் செல்வோர், உத்தியோகத்தர் ஆகியோருக்கு இப்பயிற்சி வகுப்புக்கள் நடத் தப்படவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள் ளோர் சாவகச்சேரி நவீனசந்தை மேல்மாடியில உள்ள சங்க அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## காலபோக நெற்செய்கை பாதிப்பு

சாவகச்சேரி,ஒக்.4

தொடர்ந்து பெய்து வரும் மழையால் காலபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. காலபோக நெற்செய்கைக்காக வயலில் நெல் விதைத்தவர்கள் கவலையடைந்துள்ளனர்.

பெய்துவரும் மழையால் வயல் வெளிகளில் நீர் தேங்கத் தொடங்கியுள்ளது.

இதனால் முளைத்த நெற்பயிர்கள் அழியும் நிலை ஏற்படலாம் என விவசாயிகள் தெரிவித் தனர். (3-31)

## அச்சுவேலியில் முதியோர்தின விழா

அச்சுவேலி,ஒக்.4

கோப்பாய் பிரதேச செயலர்பிரிவின் முதியோர் தின விழா எதிர்வரும் வியாழக் கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக. மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அசர்த சீலன் தலைமையில் நடைபெறும் இவ்விழா வில் கிராமசேவையாளர் பிரிவு வாரியாகத் தெரிவுசெய்யப்பட்ட முதியோர்கள் அன்பளிப்பு வழங்கிப் பாராட் டிக் கௌரவிக்கப்படுவர். (3-11)

## தென்மராட்சியில் காணிக்கச்சேரி

சாவகச்சேரி,ஒக்.4

தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகளால் மந்துவில் கிழக்கில் 50 வீட்டுத் திட்டப் பிரிவிலும், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற 70 வீட்டுத்திட்டத்திலும் காணிக் கச்சேரிகள் நடத்தப்படவுள்ளன.

மந்துவில் கிழக்குப் பிரிவில் எதிர்வரும் 8ஆம் திகதியும், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றப்பிரிவில் எதிர்வரும் 11 ஆம் திகதியும் காணிக்கச்சேரி இடம்பெறவுள்ளது என தென்மராட்சி பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித் தன. (3-31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை**

எமது பாடசாலையில் 2004 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த,

**இராசரத்தினம் தனிஷ்ரன் -129 புள்ளிகள்**
**ஷிரோமி தர்மலிங்கம் -138 புள்ளிகள்**

ஆகியோரையும், இவர்களுக்குக் கற்பித்தலை ஊக்குவித்த ஆசிரியர் களையும் அனைவரையும் வழிநடத்திய அதிபரையும் பாராட்டி வாழ்த்துவதில் மனமகிழ்ச்சியடைகின்றோம்.

(சி-37997) (24-14-18-34) - பாடசாலை அபிவிருத்திச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




குரும்பைகட்டி, புலோலி தெற்கில் வசிக்கும் தவலிங்கம் - பாமா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவியுமான

செல்வி அபிரா தவலிங்கம்

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக் காகப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(37169)(34-14)

நடராஜலிங்கம் குடும்பம் (பெரியப்பா),
கிருஷ்ணகுமார் குடும்பம் (சித்தப்பா),
குகதாஸன் குடும்பம் (அச்சா மாமா), அம்மம்மா.

## ஓய்வுபெற்ற (சுகாதாரசேவைகள்)

போதுசன சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான

**முக்கிய கலந்துரையாடல்**

**1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அனைத்து பொ.சு.வெ. உத்தியோகத்தர் கள் நாளைமறுதினம் (06.10.2004) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு (பு.நே.) சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் காரியாலய முன்றிலில் தவறாது சமுகந்தரவும்.**

**ந.பத்மநாபசர்மா**
ஓய்வுபெற்ற சு.சே.வெ.உ.

(37168)(34-14)

## சர்வதேச ஆசிரியர் தினம் ஒக்ரோபர் 5

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவும், தென்மராட்சி கல்வி வலயமும் இணைந்து நடத்தும் இத்தினத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் அன்புடன் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கிறோம்.

**இடம்:** *யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி*
**காலம்:** *நாளை (2004. 10. 05)*
*செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணி*

**ஒக்ரோபர் 5**

செயலாளர்,
யாழ். மாவட்டம்.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

(37167)(34-14)

## மரண அறிவித்தல்

திருமதி

### வீரசிங்கம் நல்லம்மா

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி வீரசிங்கம் நல்லம்மா அவர்கள் நேற்று முன்தினம் (02.10.2004) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும பரமசாமி, சிவஞானம், சதாசிவம் (ஹற்றன்), சிவபாலன் (ஹற்றன்), மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சோதி அம்பாள், பராசக்தி, சிவமணி, ஜெகதீஸ்வரி, கணேசன், செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (04.10.2004) திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (37170)(29)

தகவல்:
சிவஞானம் (மகன்).

பொது சன நூலகம்

# 'தேசியத் தலைவரின் பன்முக ஆளுமை' நூல் சுவிஸில் வெளியீடு






தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தமிழ் உணர்வாளர் இருவருக்கு நூலை வழங்கி வெளியிட்டு வைக்கின்றார்.



மாவீரர் வணக்கத்தின் போது...






சிறப்புரைகள் ஆற்றிய கனடா சட்டநிபுணர் நேரு குணரட்ணம், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.கௌசல்யன் ஆகியோர்களைக் காணலாம்.





கலைநிகழ்வையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# மனித சித்திரவதைகளைத் தடுக்க வழிபிறக்கும் காலம் எப்போது வரும்?

சித்திரவதைகள் இன்று நம் நாட்டிலும் சரி உலகளாவிய ரீதியிலும் சரி மிகப்பெரிய சிக்கல் நிலையைத் தோற்றுவித்துள்ளன.

மனிதநேயம் என்பது குறைந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் சீனாவில் இறந்த குழந்தைகளை "சூப்" வைத்தும், தொப்புள் நாடிகளைச் சுவைத்தும் உண்ணுகின்ற நிலை இன்று மனித குலத்தில் ஊடுருவியுள்ளது. இதனாலும் மனிதனை மனிதன் உண்ணத் தொடங்கும் காலம் வந்துவிட்டதாலும் இனி சித்திரவதைகள் சாதாரணமான ஒரு நிலையாக மாறிவிடவுள்ளன.

இன்று சகல நாடுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற திரைக்குப் பின்னால் இடம் பெற்றுவரும் சித்திரவதைகளுக்கு எதிராக எழுப்பப்பட்டுவந்த ஒருமித்த குரலின் பெறுபேறாகவே சர்வதேச சித்திரவதை எதிர்ப்புத் தினம் உருவாகியுள்ளது.

மனித வாழ்க்கையின் தோற்றம் முதலே சித்திரவதைகளும் இவ்வுலகில் காலூன்றத் தொடங்கிவிட்டன. மனிதன் மிகவும் நாகரிகமடைந்துவிட்டான் என்று பீற்றிக்கொள்ளப் படுவதுண்டு. பாரிய வளர்ச்சியினை மனித சமூகம் எய்திவிட்டது என்று பறைசாற்றிக் கொள்வதில் குறைவு இல்லை என்றபோதும் மனிதன் தோன்றிய யுகத்தில் ஆரம்பமான காட்டுமிராண்டித்தனமான சித்திரவதை முறைகள் இன்றும் பின்பற்றப்படுவது மிகவும் பரிதாபகரமானதாகும்.

தமது எதிரிகளாக இருப்பவர்களைக் கைது செய்து கொண்டுசென்று தமது வைராக்கியத்தைத் தீர்த்துக்கொள்ளும் விதமாக சித்திரவதை செய்வது, இரு குழுக்களிடையே யுத்தம் இடம்பெற்றால் எதிர்க்குழுவின் உறுப்பினர்களைக் கைதுசெய்து கொண்டு சித்திரவதை செய்வது, உளவாளி எனக் கருதி கொண்டுசென்று உண்மைகளைக் கண்டறிவதன் பொருட்டு சித்திரவதை செய்வது என நிலவிய பயங்கரங்கள் இன்றும் அதே வடிவில் மக்கள் சேவகர்கள் எனக் கருதப்படும் பொலீஸாரின் சிறைக்கூடங்களிலும் இடம்பெற்று வரும் துயரம் மாறியதாக இல்லை. நவீன விஞ்ஞான வளர்ச்சியினூடே சித்திரவதைகளும் மாறுதலடைந்து வந்துள்ளபோதும், அதன் கொடூரத் தன்மை மாறுதலடைந்ததாக இல்லை. மன ரீதியாக, உடல் ரீதியாக மனித உயிர்கள பெரும் சித்திரவதைகளால் சிதைக்கப்பட்டே வருகின்றன.

**செல்வராஜா ரமேஷ் எம்.ஏ.**

உள்நாட்டுப் போரினால் நாடுகள் சிதைவுறும் யுகம் இது. உரிமைகள் கேட்டுப் போராடும் குழுக்களும், அரசுகளும் போரில் ஈடுபட்டு வருகின்றன. இந்நாடுகளில் பொதுமக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் படுபயங்கரமானவையாகும். போராடும் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் அனைவரையும் அரச படைகள் கைதுசெய்து உண்மைகளை அறியும்பொருட்டுக் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்குகின்றன. இச்சித்திரவதைகளின் போது பாலியல் வித்தியாசங்கள் கூடக் கவனிக்கப்படுவதில்லை என்ற கொடூரமும் நிலவுகின்றது.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதன் பொருட்டு, பல நவீன முறைகள் இன்று கண்டறியப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட ஒருவரிடமிருந்து உண்மைகளை வெளிக்கொணர்வதன் பொருட்டு உடல் உபாதைகளுக்கு உட்படுத்தாமலே மனோ ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் உண்மைகளை வெளிக்கொணரமுடியும். சில வளர்ச்சிகண்ட நாடுகளில் இத்தகைய நவீன முறைகள் பின்பற்றப்படுகின்போதும், இதனைச் செயற்படுத்துபவர்களுக்கு அதிக பயிற்சியும், பக்குவநிலையும் தேவைப்படுவதன் காரணமாக அத்தகைய முறையில் கவனம் செலுத்துவதை விட்டு மிகவும் சுலபமாகக் கைவரக் கூடிய கொடூர வன்முறைகளைப் பின்பற்றுகின்றனர் என்று தெரியவருகிறது. இக்கொடுமையைத் தாங்கமுடியாத சாதாரண அப்பாவிகளும் தாம் குற்றவாளிகள் என ஒப்புக்கொள்கின்றனர்.

சித்திரவதைகள் பல்வேறு வடிவில் இடம் பெறுகின்றன. வீடுகளில் தொழில்புரியும் சிறுவர், சிறுமியர் முதல் பெண்கள் வரை அனுபவிக்கு சித்திரவதைகளும் இன்று உலகம் முழுவதும் இடம்பெறுகின்றன.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணிப் பெண்களாகச் செல்பவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் நாள்தோறும் பத்திரிகைச் செய்திகளாக வெளிவருகின்றன. இத்தகவல்கள் வெளிவருகின்றபோது அதற்கான நடவடிக்கைகள் அரச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றபோதும் அவை நிரந்தரமான தீர்வுகளுக்கு வழிவகுப்பனவாக இல்லை என்பதை இன்று அதிகரித்துவரும் சித்திரவதைச் சம்பவங்களின் தொகை சுட்டிக் காண்பிக்கின்றது.

சகல மட்டத்திலும் இடம்பெறும் சித்திரவதைகள் வன்முறைகளாகும். சித்திரவதைகளை நிறுத்தாமல் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியாது என்பதைத் மனதில் இருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சித்திரவதைகளுக்கு எதிராக முறையீடு செய்வதற்கான வசதிகள் இன்று சகல நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்ற போதும் இவை முறையாகப் பின்பற்றப்படுவதும், முறையிடுபவர்கள் பாதுகாக்கப்படுவதும் இல்லை என்று சித்திரவதைக்கு எதிரான சங்கங்கள் முறையிடுகின்றன.

முறையிடுபவர்களைப் பாதுகாப்பதோடு, விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து தீர்ப்புகளை வழங்கவேண்டும். உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் பரந்தளவிலான பகிரங்கப்படுத்தலுடன் சித்திரவதைகளுக்கு எதிரான கண்டனக் குரலை விரிவுபடுத்தவேண்டும்.

(சர்வதேச சித்திவதை எதிர்ப்புத் தினம் இன்றாகும்)

# 'சம்ரெக்' நிறுவனத்தின் ஆங்கிலப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

2004, 2005 ஆம் ஆண்டுக்கான 'சம்ரெக்கின்' நாடு தழுவிய தேசிய ஆங்கில டிப்ளோமாப் பரீட்சைகள் எதிர்வரும் 30ஆம் திகதியும், மே மாதம் 28ஆம் திகதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு 2004ஆம் ஆண்டுக்கான பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதியும், 2005 ஆம் ஆண்டுக்கான நாடு முழுவதுமான பொதுப்பரீட்சை மே மாதம் 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

தொலைக்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பித்து 1-22 வரையான பாடப் புத்தகங்கள் பெறாதவர்கள் 841, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சம்ரெக்' நிறுவனத்தின் தலைமையலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


(4-204)

# எமது சருமம்...

**எமது பிரதேசத்தில் பொதுவாக ஏற்படும் தோல் நோய்கள் தொடர்பாக தெளிவான அடிப்படைஅறிவினை ஓரள வேனும் வழங்கக்கூடிய வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமாணவன் எஸ்.கஜேந்திரன் 'எமது சருமம்' என்னும் தலைப்பில் வரையும் கட்டுரையின் நான் காவது பகுதி இது. (4)**

### எக்சிமா

எக்சிமா என்பது அக, புற காரணிகளின் தூண்டுதலினால் தோலிற் உண்டாகும் தனித் துவமற்ற அழற்சிக்குரிய (Inflammatory) தூண டற் பேறாகும். இது உலக மக்கள் தொகையில் 10 சதவீதமானோரை பாதித்துள்ளதாகக் கணக் கிடப்பட்டுள்ளது. இந்நோய் ஏற்படுவதில் பரம்ப ரைத் தாக்கம் செல்வாக்குச் செலுத்துவதாக நம்பப்படுகிறது. தகுந்த வைத்திய ஆலோச னையின்படி கிரமமான மருந்துப் பிரயோகம் சுய கட்டுப்பாடு என்பவற்றின் மூலம் இந்நோயினை ஒரு கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கமுடியும்.



**கடிகாரத்தின் பட்டி (Watch Strap) ஒவ்வாமை யுள்ள ஒருவருக்கு அதனால் Contact Dermatitis எனும் எக்சிமா நோயின் ஒருவகை ஏற்பட்டுள்ளதனை படத்தில் காணலாம்.**

### எக்சிமா உருவாவதற்கான விளக்கம்

எக்சிமா எவ்வாறு உருவாகின்றது என்பது இன்றுவரையில் முழுமையாக அறியப்பட வில்லை. எனினும், நமது குருதியில் உள்ள TH2 (உதவி வழங்கும் நிணநீர் குழியம்) வகை யினைச் சார்ந்த CD4 நிணநீர் குழியங்கள் தூண்டப்படுவதன் காரணமாகவே இந்நோய் ஏற படுவதாக நம்பப்படுகின்றது. இத்தூண்டலில் அக, புற காரணிகள் பல செல்வாக்குச் செலுத் துகின்றன. அவற்றைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்.

நிணநீர் குழியங்கள் சில காரணிகளால் (அக, புற) தூண்டப்படுதல் ஒரு சிலரின் (atopic individuals) மட்டுமே நிகழ்கின்றது. இதுவே, இவர்களது எக்சிமா நோய்க்கு இட்டுச் செல்கின்றது. பரம்பரைத் தாக்கத்தின் காரண மாகவே ஒருவரில் இத்தகைய இயல்வு (atopic Character) வந்திருக்கலாம் என நம்பப் படுகின்றது. ஆனால், ஒரு தாய்க்கு அல்லது தந்தைக்கு எக்சிமா நோய் இருப்பின், அவர்க ளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு நிச்சயமா இந்நோய்வரும் எனக் கூறமுடியாது. ஆயினும், இந்நோய் வருவதற்குச் சந்தர்ப்பம் 20-30% உள்ளது. மேலும் தாய், தந்தை இருவரும் எக்சிமா நோயால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எக்சிமா வருவதற்குச் சந்தர்ப்பம் 50 வீதம் எனவும் கண டறியப்பட்டுள்ளது.

### எக்சிமாவைத் தூண்டும் காரணிகள்


எக்சிமா நோயினதும் சில அகக்காரணி கள், புறக்காரணிகள் என்பவற்றால் தூண் டப்படுகிறது. அவை பின்வருமாறு:

**அகக் காரணிகள்:**

★ மன அழுத்தம்
★ மன உளைச்சல்


**புறக்காரணிகள்:**

★ அரிப்பை ஏற்படுத்தும் சில இரசாயனங் கள் அவை கலந்த சர்வக்காரங்களும்
★ சில உலோகங்கள் (நிக்கல், மோதிரம், செப்பு வளையம்)
★ பொட்டு வகை (ஸ்டிக்கர்) குங்குமம்
★ பூக்களின் சாறு
★ தூசி
★ பாதணி வகைகள் சில
★ சில வகைத் துணிகள் (நைலோன்)




**ஒவ்வாமையான பொருள்களின் தொடுகையினால் ஏற்படும் Contact Dermatis என்னும் எக்சிமா வகை ஏற்படும் இடங்களாகும். இங்கு சாத்தியமான சில ஒவ்வாமை தரும் பொருள்களும் அவை நோயை ஏற்படுத்த சாத்தியமான இடங்களும் படத்தில் காட்டப் பட்டுள்ளது.**

மேலே குறிப்பிட்ட அகப், புறக் காரணிகள் சாதாரணமான ஒருவரில் எக்சிமாவை ஏற்படுத் தும் எனத் தவறாகக் கருதுதல் கூடாது. இவை பெரும்பாலானோரில் எவ்விதமான பாதிப்பினை யும் ஏற்படுத்துவதில்லை. ஆனால், எக்சிமா நோய் ஏற்படச் சாத்தியமான நபர்களில் (atopic individuals) இக்காரணிகள் எக்சிமா நோயின் தாக்கத்தினை அதிகப்படுத்துகின்றன. எனவே, குறிப்பிட்ட இந்நபர்கள் மட்டும் தங்க ளுக்கு ஒவ்வாத பொருள்களைத் தவிர்த்தல் இந்நோயினைக் கட்டுப்படுத்தப் போதுமானதா



கும்.

அத்துடன், முக்கியமாகக் கவனிக்கத் தக்க விடயம் யாதெனில், ஓர் எக்சிமா நோயாளரின் நோய்த்தாக்கத்தினை அதிகரிக்க குறித்த ஒரு புறக்காரணி வேறு ஒரு நோயாளரில் எதுவித பாதிப்பினையும் ஏற்படுத்தாமல் இருக்கலாம். இதிலிருந்து நோய்த்தாக்கத்தினை அதிகரிக் கும் புறக்காரணிகள் ஆளுக்கு ஆள் வேறுபடு கின்றது என்பதனை உணர லாம்.

ஒருவரில் நோயின் தாக் கத்தைத் தூண்டும் இப்புறக் காரணிகளைக் கண்டறிவ தற்கு 'Patch Test' எனும் பரி சோதனைமுறை' பயன்படுத் தப்படுகின்றது.

### எக்சிமாவின் குணங்குறிகள்:

நோயின் ஆரம்பத்தில் தோல் சிவந்திருக்கும், சிறிய வீக்கங்கள், வெடிப்புகள் என் பன தோலில் காணப்படும். மேலும் குறிப்பிட்ட தோலின் பகுதி நிறமிழந்து, வெளிறிக் காணப்படும். அத்துடன், தோலி லிருந்து திரவம் கசிதலும் இடம்பெறும். ஆயினும், பிந்திய நிலையில் தோல் தடித்து செதில் போன்று உரி யும். தோலில் எரிவு, கடி என்பன ஏற்படும்.

தோலில் நோய் ஏற்பட்ட இடங்களில் நுண் ணங்கி (பொதுவாக பற்றீரியா) தொற்று ஏற்ப டின் புண்கள் ஏற்படலாம். இங்கு இந்நோயாளர் களுக்கு சலரோகம் போன்ற நோய்கள் இருப் பின் அவை பாரிய பின்விளைவுகளை ஏற் படுத்தச் சந்தர்ப்பம் உண்டு.

### எக்சிமாவின் சிகிச்சை முறை

எக்சிமா நோயினை முற்றாகக் குணப்படுத் தல் சற்றுச் சிரமமானது. எனினும், நோயினைக் கட்டுப்படுத்தி சமூகத்தில் ஏனையோரைப் போல அவர்களும் சாதாரண வாழ்வைத் தொடரமுடி யும்.

எக்சிமா நோயின் குணங்குறிகள் ஒருவ ருக்கு ஏற்படின் அவர் தாமதியாது உடனடியா கத் தோல் வைத்தியர் ஒருவரை அணுகி சிகிச்சை பெறுதல் சிறந்தது. இதனால் இந்நோயினால் ஏற்படும் பின்விளைவுகளைத் தவிர்க்கமுடியும்.

ஒருவர் தமது நோயினை அதிகரிக்கும் காரணியினை/காரணிகளை அவரது அனுப வத்தின் மூலம் கண்டறியலாம். மேலும் வைத் திய உதவியை நாடுவதனால் Patch Test மூல மும் ஒவ்வாத காரணியைக் கண்டறியமுடியும்.

எனவே, ஒருவர் தனக்கு ஒவ்வாத நோயைத் தூண்டும் குறித்த காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம் பெருமளவில் நோயின் தாக்கத்தினைக் குறைக்கலாம். அத்துடன், வைத்திய ஆலோச னைப்படி மருந்தினைத் தொடர்ச்சியாக உப யோகிப்பதால் நோய்த் தாக்கத்தினை முற்றா கக் குறைக்கமுடியும்.

ஒவ்வாத காரணியினை முற்றாகத் தவிர்ப் பது என்பது சிலரில் சுலபமாக அமையலாம். உதாரணமாக நிக்கல் கைக்கடிகாரம் எனின், அதனைத் தவிர்த்து வேறு பிளாஸ்ரிக் கைக் கடிகாரத்தை உபயோகிக்கலாம். எனினும், ஒரு சிலரில் இதுவே இயலாத ஒரு காரியமாக இருக்கும். உதாரணமாக சிமெந்து வேலை செய்யும் கட்டடத் தொழிலாளி ஒருவரில் சிமெந்து ஒவ்வாமை இருப்பின் அவர் அதனைத் தவிர்ப் பது கடினம். எனினும், அவர் இயன்றளவு சிமெந்துடன் தொடர்பினைக் குறைப்பதன் மூலம் மட்டுமே தனது நோயினைக் கட்டுப்படுதத முடியும் என்பதனை விளங்கிக்கொள்ள வேண் டும். இங்கு அவர் பிளாஸ்ரிக் கையுறை நீண்ட காலுறை போன்றவற்றினைத் தொழில் புரியும் போது உபயோகிக்கலாம். அல்லது இயலு மெனில் தனது தொழிலை மாற்றியமைத்துக் கொள்ளலாம். இவ்வாறான செயற்பாடுகள் மட்டுமே அவரது நோயினைக் குணப்படுத்தும்.

எக்சிமா நோய்க்குச் சிகிச்சை எடுப்பின் அதனால் கண்பார்வையில் பிரச்சினை, தொய்வு போன்ற பின்விளைவுகள் வரலாம் எனத் தவறான ஓர் ஐயப்பாடு எமது மக்கள் மத்தியில் நிலவு கின்றது. இதனால் அவர்கள் சிகிச்சை பெறத்

**சண்முகசுந்தரம் கஜேந்திரன்**
**4 ஆம் வருட மாணவன்,**
**மருத்துவ பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

தயங்குகின்றனர். எக்சிமாவிற்கான சிகிச்சை அவர்கள் நினைப்பதைப் போன்று எந்தவித பின்விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. எனவே, நோயின் குணங்குறிகள் தென்பட்ட உடனேயே வைத்திய சிகிச்சையைப் பெறு தல் சாலச்சிறந்தது.

*(வளரும்)*

---

# நெருப்புக் காய்ச்சல்.... ஓர் ஆபத்தான தொற்று நோய்

நெருப்புக் காய்ச்சல் ஓர் உயிருக்கு ஆபத் தான தொற்றுநோயாகும். இந்த நோயைப் பரப புவது சல்மனெல்லா ரைபி (Salmonella typhi) என்று சொல்லப்படும் ஒரு நுண்கிருமி.

**இந்த நோய்க்குரிய அறிகுறிகள்**

★ தொடர்ந்து காய்ச்சல்
★ தலைவலி
★ சோம்பல்
★ சாப்பாட்டுக்கு விருப்பமின்மை
★ இதயத்துடிப்பு குறைதல்
★ வயிற்றோட்டம் அல்லது மலச்சிக்கல்
★ இருமல் என்பனவாகும்

**யாருக்கு நெருப்புக்காய்ச்சல் அதிகமாகத் தொற்றும்?**

சல்மனெல்லா ரைபி என்ற நுண்கிருமி கூடு தலாக உள்ள நீரைப் பருகுபவர்கள் அல்லது சாப்பாடுகளைச் சாப்பிடுபவர்கள் இந்த நோயி னால் பீடிக்கப்படுவார்கள்.

**நெருப்புக்காய்ச்சல் எப்படி பரப்பப்படுகின்றது?**

நெருப்புக் காய்ச்சல் ஒரு தொற்றுநோயா கும். ஆகையினால் இந்த நோயினால் பீடிக்கப் பட்டிருப்பவர்களினால் கையாண்ட உணவுப் பொருள்களையோ அல்லது குடிபானங்களையோ உட்கொள்வதனால் உங்களுக்கு நெருப்புக் காய்ச்சல் வரலாம் அல்லது நெருப்புக்காய்ச் சலினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களது கழிவுப் பொருள்கள் (முக்கியமாக மலம்) நீரில் கலப்ப தினால் இந்த நீரில் இந்த நோயைப் பரப்பும் நுண்கிருமிகள் கூடுதலாக இருக்கும். இந்த நீரைக் குடிப்பதனாலும் அல்லது உணவுப்பொருள் களை இந்த நீரினால் கழுவுவதாலும் இந்தக் கிருமியின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

**இந்த கிருமியை தொற்றிக்கொண்ட பின் எவ்வளவு காலத்திற்கு பின் நோயின் அறிகுறிகள் தோன்றலாம்?**

இந்த நோய்கிருமிகள் கூடுதலாக உள்ள குடிநீரைக் குடித்தோ அல்லது சாப்பாடுகளைச் சாப்பிட்டதற்கு பின் 3 நாள் முதல் 3 மாதம் வரைக்குள்ளான காலங்களில் இந்த நோய்க்கான அறிகுறிகள் தோன்றலாம். அநேகமாக ஒரு கிழமை முதல் 3 கிழமைக்குள் நோயின் அறி குறிகள் தோன்றுவதற்குச் சாத்தியமுண்டு.

**எப்படி நெருப்புக்காய்ச்சலை உறுதிப்படுத்துவது? (அல்லது அனுமானிப்பது)**

சல்மனெல்லா ரைபி என்னும் கிருமியை இரத்தத்திலிருந்தோ அல்லது மலத்திலிருந்தோ வேறுபடுத்துவதனால் நெருப்புக் காய்ச்சலை உறுதிப்படுத்தலாம்.

**நெருப்புக்காய்ச்சலை எப்படி குணப்படுத்தலாம்?**

அன்ரிபயோட்டிக் (நுண்ணுயிர்க் கொல்லி கள்) என்னும் மாற்றுமருந்தைப் பாவிப்பதனால் இந்நோயைக் குணப்படுத்திக்கொள்ளலாம். பொதுவாக இந்த மாற்றுமருந்தைப் பாவிக்கத்




தொடங்கி 2-3 நாள்களில் இந்த நோயின் அறிகுறிகள் மறையத் தொடங்கும் இந் நோயி னால் இறப்பு வருவது சரியான குறைவு இருந் தாலும் நோயாளி மாற்றுக்குளிகையை பாவிக் காவிட்டால் நெருப்புக்காய்ச்சல் பலகிழமைகள் அல்லது மாதங்களாக தொடர்ந்து இருக்கும். 20 வீதமான நோயாளிகள் இந் நோய்களின் சிக் கல்களினால் இறக்க நேரிடலாம்.

**நெருப்புக்காய்ச்சல் வந்தவர்கள் முக்கியமாக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது என்னவென்றால்...**

உங்களது நோயினுடைய அறிகுறிகள் இல்லாமல் போய்விட்டாலும், நீங்கள் இந் நோயினுடைய கிருமியைக் காவிக்கொண்டு திரிகின்றீர்கள். அதனால் இந் நோய் உங்க ளுககுத் திரும்பி வரலாம் அல்லது இந் நோயை நீங்கள் மற்றவர்களுக்கு பரப்பலாம். ஆகவே நீங்கள் உணவுப்பதார்த்தங்கள் தயாரிக்கும் இடங்களில் வேலை செய்பவர்களாக இருந்தாலோ அல்லது சின்னப்பிள்ளைகளை பராமரிக்கும் இடங்களில் வேலை செய்பவர்களாக இருந் தாலோ, உங்களது வைத்தியர்கள் நீங்கள் இந்த நோய்கிருமிகளில்இருந்து முற்றாக மாறி விட்டீர்கள் என்று சொல்லும் மட்டும் நீங்கள் வேலைக்குச் செல்லாமல் இருப்பதற்கு அனு மதி எடுத்துக்கொள்ளலாம்.

**நீங்கள் நெருப்புக் காய்ச்சலுக்கு மருத் துவம் செய்யும்பொழுது முக்கியமாகக் கடைப் பிடிக்க வேண்டியவை...**

★ அன்ரிபயோட்டிக் (நுண்ணுயிர்க்கொல்லி கள்) என்னும் மாற்றுக்குளிசையை உங்கள் வைத்தியர் சொல்லியபடி எடுக்க வேண்டும்.

★ மலசலகூடத்தை பாவிக்கவேண்டும். இல்லாத விடத்து வெட்டிப் புதைக்கவேண் டும். ஒவ்வொரு முறையும் மலம், சலம் கழித்தபின் கை களை நன்றாக சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

★ உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்பதையோ அல்லது பரிமாறுவதையோ தவிர்க்கவேண்டும்.

★ உங்களது வைத்தியர் உங்களது மலத்தை பரிசோதனை செய்து இக்கிருமி உங்களது உடம்பில் இல்லை என்று உறுதி செய்திருத தல் வேண்டும்.

**எப்படி நெருப்புக் காய்ச்சல் வராமல் தடுக்கலாம்.**

நெருப்புக் காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு 2 முறைகள் உள்ளன.

★ கிருமிகள் உள்ள உணவுப்பதார்த்தங் களை உட்கொள்வதையோ அல்லது நீரைக் குடிப்பதையோ தவிர்க்கவும்.

★ நெருப்புக் காச்சலுக்குள்ள தடுப்பு மருந் தைப் போடுவதானால் இரண்டு விதமான தடுப்பு மருந்துகள் உள்ளன.

1. ஊசி போடுவது
2. வாய்மூலமாக மாத்திரை உட்கொள்வது.

நீங்கள் உங்கள் வைத்தியரை அணுகி இத்தத் தடுப்பு மருந்து பற்றிய ஆலோசனைக ளைப் பெறலாம். நீங்கள் தடுப்பு மருந்து எடுத்து இருந்தாலும், நீங்கள் சாப்பிடும் போதோ குடிபானம் குடிக்கும்போதே கவனமாக இருக்க வேண்டும். தடுப்பு மருந்துகள் 100 வீதம் பயனளிக்கமாட்டாது. நீங்கள் சாப்பிடும்போதும், குடிபானங்கள் குடிக்கும்போதும் கவனமாக இருந்தால் நெருப்புக்காச்சல் மட்டுமல்ல வாந்தி பேதி, வயிற்றுளைவு, செங்கண்மாரி என்ற வருத்தங்களிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**நீங்கள் நெருப்புக் காய்ச்சல் கூடுதலாக உள்ள இடங்களிற்கு பிரயாணம் செய்யும்பொழுது பின்வருவனவற்றை முக்கியமாகக் கவனிக்கவும்.**

★ குடிக்கும் நீரை நன்றாகக் கொதித்து ஆறவைத்துக் குடிக்கவும், அல்லது பாதுகாப் பான நீர் போத்தல் வாங்கிக் குடிக்கவும்.

★ ஐஸ்பழம், ஐஸ்கிறீம் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

★ நன்றாக சமைத்த, சூடாக உள்ள உண வுகளைச் சாப்பிடவும்.

★ சமைக்காத காய்கறிகள், தோல் உரிக் காதவையாக இருந்தால் நீங்கள் தோல் உரித் துச் சாப்பிடவும், தோல் உரிக்காத சாப்பாடுக ளைச் சாப்பிடவேண்டாம். எப்பொழுதும் கையை நன்றாக சவர்க்காரம் போட்டுக் கழுவவும்

★ தோல் நீக்கமுடியாத பழங்களையோ, சமைக்கப்படாத காய்கறிகளையோ சாப்பிட வேண்டாம்.

★ வீதிகளில் விற்கப்படும் சாப்பாடுக ளையோ, குளிர்பானங்களையோ உட்கொள் வதை தவிர்க்கவும். வீதிகளில் விற்கப்படும் உணவுகள், சுத்தமாக வைத்திருப்பது கஷ்டம். அநேகமாக பிரயாணிகள் வீதிகளில் விற்கும் உணவுப் பதார்த்தங்களைச் சாப்பிடுவதானால் நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.

**நோயைத் தடுப்பதற்கு இலகுவான வீதிமுறை**

நீரை நன்றாகக் கொதிக்கவைக்கவும், நன்

**ந.அருணன் (தமிழீழ சுகாதார சேவைகள்)**

றாக சமைக்கவும், மரக்கறி வகை, பழ வகை ஆகியவற்றின் தோலை உரிக்கவும். இல்லை யென்றால் சாப்பிடுவதை தவிர்க்கவும்.

# நியாப் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட நாகேந்திரபுரம் கிராமம் கையளிப்பு!

பரந்தன்,ஒக்.4

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட நாகேந்திரபுரம் கிராமம் அண்மையில் அப்பகுதி மக்களிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இந்தக் கையளிப்பு நிகழ்வு மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் வ.வைரமுத்து தலைமையில் நாகேந்திர்புரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியை புளியம் பொக்கனை வலயப் பொறுப்பாளர் சுடர்விழியன் ஏற்றினார்.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.சிவயோகன், கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் இராசலிங்கம், சின்னத்தம்பி, கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தா இ.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் பலர் கருத்துரை வழங்கினர்.

அரச அதிபர் கருத்து வழங்கும்போது - கண்டாவளைப் பிரதேசத்தில் நியாப் திட்டத்தில் முதலாவது வேலைத்திட்டம் நாகேந்திரபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதி மாதர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் நன்றாக தமது சேவைகளை இக்கிராமத்தில் மேற்கொண்டு வருகின்றனர். வறிய கிராமமாக இருந்த இக்கிராமத்தில் ஜீவனோபாய ஆதாரக் கடன் திட்டத்தின் மூலம் பலர் நன்மையடைந்துள்ளனர்.


இதேபோன்று, ஏனைய கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் செயற்பட்டால் எமது கிளிநொச்சி மாவட்டம் வெகுவிரைவில் அபிவிருத்தி அடையும் எனக் கூறினார்.


நியாப் திட்டத்தின் கீழ் நாலரைக் கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதி மற்றும் கிராம வீதிகள், நீர்பாயும் மதகுகள் என்பன 39 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் பொது நோக்கு மண்டபம் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டன.

3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் மூன்று பொதுக்கிணறுகள் அமைக்கப்பட்டன.

தச்சடம்பன் குளம் புனரமைப்பிற்காக 11 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் ஜீவனோபாய ஆதாரக் கடனுக்காக 7 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவும் நியாப் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

இக்கிராமத்தில் சுழற்சி முறையாக ஜீவனோபாய ஆதாரக்கடன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. (4-352)





நாகேந்திரபுரம் கிராமக் கையளிப்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உரையாற்றுவதையும் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ.வைரமுத்துவிடம் அதற்கான பத்திரத்தை வழங்குவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

## புதுக்குடியிருப்பில் சிறுவர் தின நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர்கள் தின நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் கடந்த முதலாம் திகதி சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலை மாணவன் நா.கருணாகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் வித்தியாலய அதிபர் செ. இரவீந்திரன், மூத்த ஆசிரியை திருமதி ரா.திருஞானம் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஆசிரியை திருமதி எ.ஐ.காந்தராசா உரையாற்றினார். தமிழ்மொழி வாழ்த்துடன் ஆரம்பமான கலைநிகழ்வுகளில் சிறுவர்களின் குழு இசை அபிநயப் பாடல், கவிதை, அபிநய நடனம், பேச்சு, செல்வி செ.எழில்மதியின் தனிநடனம் என்பன இடம்பெற்றன.(4-353)

## தொழில்நுட்ப நிறுவனத்தில் ஏ.ஏ.ரீ. கற்கைநெறி ஆரம்பம்

வட்டக்கச்சி,ஒக்.4

பொருண்மிய மதியுரையக ஆதரவில் லண்டன் ரி.ஆர்.ரெக் (TR Tech) அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஏ.ஏ.ரீ. (AAT) கற்கைநெறி இன்று ஆரம்பமாகியுள்ளது.

இதன் ஆரம்பநாள் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நிறுவன அதிபர் தி.பிரபாகரன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. தலைமையுரையினைத் தொடர்ந்து கிளிநொச்சி அரச செயலக கணக்காளரும் இக்கற்கைநெறியின் விரிவுரையாளருமான ப.ஜெயராஜா கற்கைநெறி பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து 'போரூட்' நிறுவனப் பிரதிநிதியும் நிறுவன ஆளுநர் சபை உறுப்பினருமான கா.சாந்தலிங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவரும் நிறுவன ஆளுநர்சபை உறுப்பினருமான இகணேசபிள்ளை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக், பொருண்மிய மதியுரையக தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட பேராசிரியருமான பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இக்கற்கைநெறி முதன்முதலாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஆரம்பிக்கப்படுவதும் ஆங்கில மொழிமூலம் இக்கற்கைநெறி நடத்தப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். (4-405)




## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை 2003 ஆம், 2004 ஆம் ஆண்டுக்கான புதுப்பித்த கடிதத்தினையும் கொண்டுவருமாறு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரி.தாஸ் கேட்டுள்ளார். (4-7)

## கப்டன் சுருதி ஞாபகார்த்த மாலைநேரக் கல்விக்கூடம்

வட்டக்கச்சி,ஒக்.4

வட்டக்கச்சி பத்து வீட்டுத் திட்டக் கிராமத்தில் கப்டன் சுருதி ஞாபகார்த்தமாக மாலை நேரக் கல்விக்கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கல்விக் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் பத்து வீட்டுத் திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன மேற்பார்வையாளர் கிருஷ்ணா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

புதிய கட்டடத்தினை தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

மாவீரர் கப்டன் சுருதியின் திருவுருப் படத்திற்கான ஈகச்சுடரினை அவரது பெற்றோர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர். தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை போராளி குகன் ஏற்றி மலர் மாலையும் அணிவித்தார்.

இந்நிகழ்விற்கான சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார். நன்றியுரையினை மாலை நேரக் கற்றல் வகுப்பின் ஆசிரியர் மேனகா நிகழ்த்தினார். (4-5-405)

## கிளிநொச்சியில் எழுச்சியுடன் நடைபெற்ற பெண்கள் சங்கமம்

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பெண்கள் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சியில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து அரங்கில் வைக்கப்பட்டிருந்த 2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப் படத்திற்கு மாவீரர் லெப்.அலனின் தாயார் சந்தணம் சுடர் ஏற்றி மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வின் தலைமையுரையினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆற்றினார். தொடர்ந்து 'பெண்களும் சமூகமும்' என்னும் தலைப்பில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியும், 'குழந்தைகளின் உடல் உள வளர்ச்சி' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலனும் கருத்துரை வழங்கினார். இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனின் உரையினைத் தொடர்ந்து 'பெண்களும் அரங்கமும்' எனும் நிகழ்வும் இடம்பெற்றது. (4-203)

## சிறப்புற நடைபெற்ற ஆய்வுகூட சேவை

வட்டக்கச்சி,ஒக்.4

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இடம்பெயர் ஆய்வுகூட சேவை அண்மையில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமானது.

ஆரம்பநாள் நிகழ்வு கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், விஞ்ஞானபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இரவீந்திரன், விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் தி.மோகனபாலன், கணிதபாட ஆசிரிய ஆலோசகர் ந.கனகசுந்தரன், வட்டக்கச்சி ம.வி. அதிபர் சி.சந்திரராஜா ஆகியோரும் கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் துறைசார்ந்த ஆசிரியர்களும் பங்குகொண்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை உதவிக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல், வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் ஆற்றினர். இவ் இடம்பெயர் சேவையில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கற்கும் சுமார் நூறு மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். (4-405)

## அடிப்படை வசதிகளின்றி கௌதாரிமுனை அ.த.க.பாடசாலை

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சி மாவட்டம் கௌதாரிமுனைப் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகிறது. இங்கு நிரந்தரக் கட்டடங்கள் இல்லை. பழைய கட்டடங்கள் திருத்தப்படவில்லை. அதிபர் அலுவலகம் இல்லை.

இவ்வாறு அடிப்படை வசதிகளற்ற இப்பாடசாலையில் தரம் 1-5 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த 100 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

ஓலைக் கொட்டகையிலேயே மேற்படி பாடசாலை நடைபெற்று வருகின்றது. இதனை புனரமைத்து மாணவர்களின் கல்வியில் நலன் கொள்ளுமாறு மாணவர்களின் பெற்றோர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். (4-403)

## கல்விக்காட்சியும் சிறுவர் தினநிகழ்வும்

புதுக்குடியிருப்பு,ஒக்.4

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலய கல்விக் கண்காட்சியும், சர்வதேச சிறுவர் தினமும் கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய அதிபர் செல்வி வ.கந்தையா தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ந.அருணாசலம் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து சிறுவர் தின நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. (4-353-203)

## தேசிய வாசிப்பு மாதம் புதுக்குடியிருப்பில் அனுஷ்டிப்பு

புதுக்குடியிருப்பு,ஒக்.4

தேசிய வாசிப்பு மாதத்தினை ஒட்டிய நிகழ்வுகள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த 30 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இப்பிரதேச எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஆதிலட்சுமி சிவகுமார், வண. பிதா எஸ்.ஈ.றெஜினோல்ட், தமிழ்க்கவி ஆகியோர் உரையாற்றினர். (4-353)

## பற்றிமா வித்தியாலய கட்டடத் திறப்பு விழா

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலத்திற்கென அமைக்கப்பட்ட கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வானது எதிர்வும் 7 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட் சகோதரி திரேசா சிம்மா அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினராக வலயக் கல்விப்பணிப்பாளரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வண அருட்திரு அமிர்தநாதர் தேவசகாயம் அடிகளார், திருமதி இ.அரியரத்தினம் மற்றும் கல்விக்கழகத்தைச் சேர்ந்த வே.ஜீவராஜன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (4-393)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

2004 தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 131 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி

**பரமசிவம் பவதாரணியையும்**

அவருக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

(37133) (39-14-44-26)


## மனதைவிட்டகலாத 29ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1917



உதிர்வு 03 - 10 - 1975

திருமதி

**மேரி கிருபையம்மா இராஜக்கோன்**

அன்னையின் வதனம் எழில் வதனம்
அமைதியும் சாந்தமும் குடியிருக்கும்
பிள்ளையின் வாழ்வே தன்வாழ்வாய்
தன்னையே தானமாய் தந்திடும்
அன்னைபோல் தெய்வம் புவியிலுண்டோ?

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

- அன்புப் பிள்ளைகள்.
32, றக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(37006) (24-26-14-44)

## வலிகாமம் தெற்கில் 15 வீதிகள் ரூ. 80 லட்சம் செலவில் திருத்தப்படும்

வலி.தெற்கு,ஒக்.4

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 15 வீதிகள் 80 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினர் இப்புனரமைப்பு வேலைகளுக்கென 50 லட்சம் ரூபாவை ஒதுக்கி வழங்கியுள்ளனர்.

மதி முப்பது லட்சம் ரூபாவும் பிரதேச சபையினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாவடி பாடசாலை வீதி, சுன்னாகம் மீன் சந்தை தெற்குப்புற வீதி, இணுவில் அளபாவோடை வீதி, கந்தரோடை நலன்புரி முகாம் வீதி, ஏழாலை இலங்கையர் கோன் வீதி, இணுவில் வட்டுவினி அம்மன் வதி, உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் குறுக்கு வீதி, உடுவில் நாவலடி வீதி, உடுவில் லவ் லேன் வீதி, மயிலணிமுதலாம் குறுக்கு வீதி, ஏழாலை ஏழுகோயில் வீதி, தம்பனை வீதி, தாவடி இந்து மயான வீதி, இணுவில் குமாரலிங்கம் வீதி, கிழவன் கட்டை வீதி ஆகிய வீதிகளே இந்நிதியின் மூலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

## உண்ணாவிரதிகள் எம்.பியைச் சந்திக்க மறுப்பு

கொழும்பு,ஒக்.4

ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்களின் உறவினர்களைச் சந்திப்பதற்காகச் சென்ற ஜாதிக ஹெலஉறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் சந்திக்க மறுத்துவிட்டனர்.

தமது போராட்டத்தில் அரசியலைக் கலக்க விரும்பவில்லை எனக் கூறியே இந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

## கிராமிய அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

தென்மராட்சி,ஒக்.4

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு பிரிவுக்கான கிராமிய அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய முன்றிலில் பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெறும்.

மேற்படி பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு கிராம அலுவலர் க.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

வலி.கிழக்கு,ஒக்.4

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த எம்.சிவபாலன் சாவகச்சேரி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த எஸ். கிளின்டஸ் கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி பொறுப்பை ஏற்கிறார். (4-180)

## குழாய்க் கிணறுகள் அமைக்க முடிவு

வடக்கு-கிழக்கு அவசர புனர்வாழ்வு திட்ட நிறுவனத்தினர் (நீர்ப்) சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நான்கு குழாய்க் கிணறுகளை அமைக்கவுள்ளனர்.

பிரதேசத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்படும் இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

கைதடிப் பிரதேசத்தில் மூன்று குழாய்க் கிணறுகளும், கொடிகாமத்தில் ஒரு குழாய்க் கிணறும் அமைக்கப்படவுள்ளன. (ஐ-117)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 - 01 - 1927



மறைவு 17 - 10 - 2003

**அமரர் இராசதுரை அரியமுத்து**


எங்கள் குடியிருந்த கோயில் அன்புத் தாயாரின் பாசமிகு முதலாம் ஆண்டு நினைவுத் தினமான 05.10.2004 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மானிப்பாய், ஆனந்தன் வைரவராலயத்தில் நடைபெறவுள்ள அன்னதான நிகழ்விலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:
இ.இராசேந்திரம் குடும்பம்,
இ.யோகேந்திரம் குடும்பம்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.
(37132)(39-14-44-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 - 05 - 1924



உதிர்வு 04 - 09 - 2004

**அமரர் வைரவன் நாகமணி**

உயிர் தந்து வளர்த்த எம் அன்புத் தந்தையே!
எம்மைவிட்டு எங்கு சென்று விட்டீர்கள்?
எங்களின் நினைவெல்லாம் உங்கள் நினைவுதான்
நீங்கள் எங்கள் தந்தை மட்டும் அல்ல, கடவுளும் நீங்கள்தான்
நீங்கள் எம்மைத் தூக்கி அணைத்த நாள்கள் எங்கே?
நீங்கள் சென்றது நிஜம் அல்ல கனவாய் உள்ளது
எங்கு சென்றுவிட்டீர்கள் கலங்குகின்றோம்
உங்களுடன் வாழ்ந்த நாள்களை நினைத்து நினைத்து
எம் மனதில் மலர்த்துகின்றோம்
ஓம் சாந்தி!

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
(37096) (26-14-44)

- குடும்பத்தினர்.
த.தயீசன் (லண்டன்).


## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

**பாடநெறி விளக்கம்: எந்தவொரு மொழியும் முதலில் கதைக்கப்பட வேண்டும். கதைப்பதற்கு முன் இலக்கணம் கற்பிக்கப்படின் இலக்கண ரீதியான சிந்தனை மூலமாகக் கதைக்கமுடியாதநிலை தோன்றும்.**

எமது 24 வகுப்புகள் கொண்ட ஆங்கில வகுப்புகளில் முழுமையாக ஆங்கிலத்தினைக் கதைக்கமுடியும். ஆங்கிலம் மூலமான எந்த ஒரு கற்கை நெறியினையும் மேற்கொள்ளமுடியும். ஆங்கிலத்தில் முழுமையான தேர்ச்சி பெறமுடியும்.

எமது 24 வகுப்புகள் கொண்ட சிங்களப் பாடநெறி மூலம் முழுமையாகச் சிங்களத்தினைக் கதைக்கமுடியும். க.பொ.த. சா.த. பரீட்சையில் சிங்கள பாடத்தில் இலகுவாகச் சித்தியடைய முடியும். சிங்களத்தில் முழுமையான தேர்ச்சி பெறமுடியும்.

**சர்வதேச தரத்திலான இப்பாடநெறி மூலம் 24 வகுப்புகளில் முழுமையாகக் கதைக்கமுடியாத அனைவருக்கும் முழுப்பணமும் திருப்பித் தர உத்தரவாதம்.**

**யார் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்?**

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், கணனி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், 8 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள்.

**50%** சலுகை நீடிப்பு: 04.10.2004 வரை- பதிவுசெய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50% சலுகையுடன் ஆங்கிலம்: ரூபா 3000, சிங்களம்: ரூபா 2000 மட்டும்

**ஒவ்வொருவருக்கும் விரும்பிய நாள்களில் விரும்பிய நேரங்களில் வகுப்புகள்**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, சுண்டிக்குளி (SAAMSTECH தலைமையகம்) மானிப்பாய் (Nilavu.com.), ஆவரங்கால் (College of Information Technology), நெல்லியடி (கொடிகாமம் வீதி), கோப்பாய் (கோப்பாய் இளைஞர் கழகம்), சாவகச்சேரி (Nilavu.com.), நாவலர் வீதி (COMCITY), பண்டத்தரிப்பு, திருநெல்வேலி உட்பட பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.

**குறிப்பு: 04.10.2004 இற்குப் பின் பதிவுசெய்பவர்கள் வரும் 30.10.2004 நடைபெறவுள்ள தேசிய ஆங்கில டிப்ளோமாப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது.**

**மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்: 077 3068968**

**SAAMSTECH**

841, Hospital Road,
Jaffna.

22-1/4, Galle Road,
Dehiwala.

(சி-37865)(34-14-44-26)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த
**குகதீபன் - கல்பனா**
தம்பதியினரின் செல்வப் புதல்வி



# அபிசிகா

தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (04.10.2004) திங்கட்கிழமை
தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக்
கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, தாத்தா (சுவிஸ்), அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அன்ரிமார், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் முருகன் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

கேணியடி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
சின்னத்துரை
(சுவிஸ்).

(37134) (33-26-14-44)

# போர்க்காலத்திலும் மக்கள் தேவைக்கேற்ப கூட்டுறவுத்துறை பணியாற்றியுள்ளது

## பாராட்டுகிறார் அரச அதிபர்

வலி.வடக்கு,ஒக்.4

கடந்தகாலத்தில் இம்மண்ணில் இடம் பெற்ற யுத்தத்தின்போது மக்களுடைய தேவை களையறிந்து அதற்கேற்ப கூட்டுறவுத்துறை தனது சேவையை முழுமையாக மக்களுக்கு வழங்கியுள்ளது.

மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

தெல்லிப்பழைக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சர்வதேச கூட்டுறவாளர் தினமும், மூத்த கூட் டுறவாளர்கள் மற்றும் சங்கத்தில் 25 வருட சேவையைப் பூர்த்திசெய்தவர்களைக் கௌர விக்கும் நிகழ்வும் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் சங்கத் தலை மையகத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அரச அதிபர் கூறியதாவது:-

வடமாகாணத்தில் கூட்டுறவுத்துறை நல்ல முறையில் இயங்குகின்றபோதும், யாழ். மாவட்டக் கூட்டுறவுத் துறையானது சிறந்த முறை யில் இயங்கி, மக்களுடைய தேவைகளையும் பூர்த்திசெய்து வருகின்றமையும் பாராட்டத்தக் கதாகும்.

யுத்தத்தின் காரணமாகக் கூட்டுறவுத்துறை தனது சொத்துக்களை இழந்துள்ளதுடன், பல் வேறு நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

கூட்டுறவுத்துறையின் இழப்புக்கள், பாதிப் புக்கள் கூட மக்களுக்கு ஏற்பட்டவையாகவே கொள்ளவேண்டும். இதற்கான இழப்பீடுகள் நட்டங்கள் உரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

நட்ட ஈடுகளைப் பெறுவதற்கான முயற்சி கள் எடுக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்த வகையான உதவிகளும் கிடைக்கவில்லை. பூரணமான சமாதானத்திற்கான சமிஞ்ஞைகிடைக் காமையும் ஒரு காரணமாகும் என்று குறிப் பிட்டார்.




வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன் உரையாற்றும்போது:-

கூட்டுறவுக் கொள்கையானது தேசிய மட் டத்தில் நாட்டின் தேவைக்கேற்ப உருவாக் கப்படவேண்டும். உயர்ந்துவரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த கூட்டுறவுத் துறையின் சேவை அவசியமாகும்.

கூட்டுறவாளர்களையும் கூட்டுறவு ஊழியர் களையும் அவர்களுடைய காலத்திலேயே பாராட்டுவது மிகவும் வரவேற்கத்தக்கதும பாராட்டத் தக்கதுமாகும்



கூட்டுறவுத் துறையில் அடுத்த சந்ததி ஈடுப டுமா என்பது இன்றுள்ள கேள்விக்குறியா கும்.

மாணவர்கள் மற்றும இளைய தலை முறையினர்களுக்கு இடையே கூட்டுறவுத் தொழி லின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்க ளையும் கூட்டுறவுத்துறையில் ஈடுபடுத்தவேண் டும். இதற்கு மூத்த கூட்டுறவாளர்கள் பாடு படவேண்டும் என்று கூறினார்.

இலங்கை தேசியக் கூட்டுறவுச்சபைத் தலை வர் பந்துரணவாக்க, பொல்கொல்லை கூட்டுற வுக் கல்லூரி பணிப்பாளர்நாயகம் உதயரஞ்சி செனிவிரத்ன, யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோரும் உரை யாற்றினார்கள். (ப-86)

# தமிழை வாழவைப்பதற்காகவே போராளிகள் உயிர் நீத்தனர்

## திருமலை தமிழ்த்தின விழாவில் உரை

திருகோணமலை,ஒக்.4

இலங்கையில் தமிழ்மொழியை நிரந்தர மாக வாழவைக்கவேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு போராளியும் தமது இன்னுயிரை நீத்துள்ளனர்.

- இவ்வாறு திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெற்ற தமிழ்த் தின விழாவில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழி லன் தெரிவித்தார்.

நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கல்விச் செயலர் இ.தியாகலிங்கம் கலந்துகொண்டார். மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங் கம் தலைமை வகித்தார். ரி.எழிலன் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழ் அழிந்துபோகக் கூடாது என்பதற்கா கவே எமது போராட்டம் தொடர்கிறது. தமிழை அழிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் நான்கு புறத்தாலும் தமிழை அழிக்கப் பாடுபட்டனர். தமிழைப் பாதுகாக்க யார் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள்? விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று பார்த் தால் அங்கு 'தமிழ் பேசும்' எல்லாம் தமிழாகவே இருக்கும். தமிழை வாழவைக்க பலரும் பாடுப டுவதாகக் கூறினாலும், செயல்முறையில் போராளிகள்தான் தமிழிற்காக உயிர்த்தியா கங்களைச் செய்துள்ளார்கள்.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கல் விச் செயலர் இ.தியாகலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

இது தமிழ் மொழிக்கு எடுக்கப்படுகின்ற விழா. சாகாவரம்பெற்ற தேன்தமிழ்மொழி. பல மொழிகள் லத்தீன், சமஸ்கிருதம் போன்றவை வாடிக்கொண்டிருக்கும் நிலையிலும் தமிழ்மொழி வளர்ச்சிபெற்று வருகின்றது.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் நாலா பக்கத்திலும் தமிழ் பயன்படுத்தப்படுகின்றது. தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழ் வாழ் கிறது என்று கூறினார். (ப-209)

# சுயநிர்ணய உரிமைக்காக உழைப்பதே எமது நோக்கம்

## வரணி வரவேற்பில் ரவிராஜ் எம்.பி.

தமிழ்த் தேசியத்தின் நலனே எமக்கு முக் கியம். கூட்டமைப்பினராகிய எம்மை ஏகோபித்த மக்கள், நாடாளுமன்றத் திற்குத் தெரிவுசெய் தமை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நாடாளுமன்றத்தின் மூலம் வெளிப்படுத்தி அதனை வென்றெடுப்ப தற்கே.



- இவ்வாறு வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத் தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் பேசுகையில் கூறினார். அதிபர் திருமதி ம.குமாரகுலசிங்கம் தலைமையில் நடந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதா வது:-

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி தலா 50 லட்சமாகும். ஆனால், அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி அதைவிடப் பன்மடங்கு அதிகம். அவர்கள் மேல திக நிதி கோரப்படும் சமயங்களில் மேலதிக நிதி கிடைக்கும் எமக்கு அப்படியல்ல. எமக்கு ஒதுக்கப்படும் நிதி மூலம் எமது குடாநாட்டில் எல்லா அபிவிருத்தி வேலைகளையும் நிறை வேற்றமுடியாது. அதற்காக நாம் அரசிடம் கையேந்தும் நிலையில் இல்லை. அதைவிட எமது மக்களின் தேசிய நலனே முக்கியம். நாம் சந்திரிகா அம்மையாருக்கு முண்டு கொடுக்க முன்வந்தால் எமக்கு 4 அமைச்சுப் பதவிகளும், 4 உதவி அமைச்சுப் பதவிகளும் கிடைக்கும். வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு தலா இரண்டு அமைச்சுப் பதவிகளும் கிடைக் கும். அதைப்போலவே உதவி அமைச்சுப் பதவிகளும் கிடைக்கும். பதவி எமக்கு முக் கியம் அல்ல.

நாடாளுமன்றத்தில் நாம் எமது சுயநிர்ணய உரிமைக்காகக் குரலெழுப்பும் அதேசமயம், மறுபுறம் சிஹல உறுமயவுடனும் ஜே.வி.யுட னும் மறுபுறத்தில் டக்ளஸ் தேவானந்தாவுட னும் பொருதவேண்டியுள்ளது.

எமது மக்கள் பலர் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகச் சொந்த வீடுகளை இழந்து, சொத்துக்களை இழந்து அகதிமுகாம்களில் அடிப்படை வசதிகளின்றி அல்லற்படுவதை யாவரும் அறிவர். இவர்கள் பிரச்சினை நாடாளு மன்றத்தின் மூலமே குரலெழுப்பி அவர்களுக்கு நிம்மதியான வாழ்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது தலையாய கடமை - என்றார். (ப-170)

# அழிவுகளை சீர்செய்து அமைதியாக 'வாழவே இடைக்கால நிர்வாகம்

## சிவாஜிலிங்கம் எம்.பி.

கொழும்புத்துறை,ஒக்.4

இன்றைய சமுதாயத்தில் பொதுநலம் குறைந்து சுயநலம் மேலோங்கி வருகின்றது. இந்நிலையில், சமுதாயப் பணிகள் சனசமூக நிலையங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். இளைஞர், யுவதிகள், சிறுவர்களை சிறந்த பிரைஜகளாக உருவாக்குவது இந்த நிலையங்களின் பணியாகும்.

சுண்டுக்குளி சனசமூக நிலைய 76 ஆம் ஆண்டு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் யோ.றொனிக்கல் தலை மையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் சிவா ஜிலிங்கம் மேலும் உரையாற்றும்போது -

அழிந்துபோன தமிழ்த் தேசத்தைக் கட்டி யெழுப்ப போராடிக்கொண்டிருக்கின்றோம். இதை முன்னெடுக்கவே இடைக்கால நிர்வாகத்தைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங் களில் குடியேறி நிம்மதியாக வாழவும், இடிபா டுகள், அழிவுகளைச் சீர்செய்யவும் இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமாகிறது.

இதைப் புரிந்துகொள்ளாத ஜே.வி.பி.யும் இனவாதக் கட்சிகளும் இதற்கெதிராகக் கூச் சலிடுகின்றன. இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது தென்னிலங்கைக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும் - என்றார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தமது உரையில் -

மக்களைப் பண்பாளர்களாகப் பயிற்றுவிப்பது சனசமூக நிலையங்களாகும். பிரதேசத்தின் வளர்ச்சிக்கு மாவிட விழுமியங்களை சிறார் களுக்கு ஊட்டவும் பணியாற்றுவது சனசமூக நிலையங்களே. பாழடைந்த யாழ்.நகரத்தை மீளக் கட்டியெழுப்பவும், வீதிகள், வடிகால்கள், சுகாதார வசதிகளை நவீனமுறையில் புனர மைக்க வரைபு களைத் தயாரித்து வைத்தி ருக்கின்றோம். பல குளங்கள் புனரமைப்பு செய் யபபடவுள்ளன.

இப்பணிகளை 3 முறைகளில் செயற்படுத்தத் தீர்மானித்துள்ளோம். அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தி, மக்கள் பங்களிப் புடன் நிர்வாகம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள், மக்கள் தாமாகவே ஈடுபடும் வேலைத் திட்டங்கள் என்பனவாகும்.



கிராமிய குளங்கள் புனரமைக்கும் வேலைத் திட்டத்தினை அவ்வப்பகுதி சனசமூக நிலை யங்கள் பொறுப்பேற்று மக்கள் வளத் தைப் பயன்படுத்தி செயற்படுத்த வசதிகள் செய்து தரப்படும் என்று தெரிவித்தார். (ப-30)

# சமூக மாற்றத்துக்கான ஆயுதங்களாக விளங்கவேண்டியவை சிறுகதைகள்

சமூக மாற்றத்துக்கான வலுவான ஆயுதங் களாகச் 'சிறுகதைகள்' திகழவேண்டும் என்று உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தெரிவித்தார்.

முகமாலை சேகரின் கொட்டுக்கடப்பு நூல் வெளியீட்டுவிழா யாழ்.பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் திருமதி கோகிலா மகேந் திரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய திரு மதி கோகிலா மகேந்திரன் 'சிறுகதைகள்' நவீன இலக்கியத்தின் ஒருவடிவம் சுவையாக சுவா ரசியமாக மற்றவர் மனத்திலே நிறையுமாறு சமூகத்திலுள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவேண்டும். படைப்பவன் ஒரு சமூகப் போராளியாக - இலக்குள்ளவனாக - மனிதகுல மாண்புக்கு மாற்றம் செய்யவேண்டியவனாய் இருந்து எழுதும்போதுதான் அவனை எழுத்தா ளனாக ஏற்றுக்கொள்ளவார்கள்.

ஐம்புலன்களின் ஊடாக நடைபெறுகின்ற நிகழ்வுகளை உள்வாங்கி, ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல் முக்கியமானது. இப் புலன்கள் யாவும் நிறைவாகப் பெற்றுள்ள பலர் உள்வாங்கலை வெளிப்படுத்தத் தெரியாதவர் களாகச் சமப்படுத்தத் தெரியாதவர்களாக உள் ளனர்.

ஆனால், சேகர் விழிப்புலன் இல்லாவிட் டாலும் நிகழ்வுகளைச் சிறப்பாக உள்வாங்கி தமது ஆளுமையைச் சிறுகதைகளாக வடித் திருக்கிறார். அகப்பார்வை மூலம் ஆழமாகச் சமூகத்தை ஆராய்ந்திருக்கிறார். சமூகப் பிரச் சினைகளைத் துல்லியமாக எடுத்துக் காட்டியி ருக்கிறார். இவரது ஆளுமையை வெளிப்ப டுத்த விழிப்புலன் ஒரு பிரச்சினையாக இருக்க வில்லை - என்றார். (ப-204-203)

# மன்னார் மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியத்தின் சேவைக்குப் பாராட்டு!

இன்றைய இளம் தலைமுறையினரும், பெரி யவர்களும், உணர்சிகளுக்கு இலகுவாக அடி மையாகிவிடுகின்றார்கள். பிரச்சினைகளை எவ் வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் முரண் பாடு என்றால் என்ன? அவைகளை நாம் எப் படி உணருகின்றோமோ அதேபோல மற்றவர் களும் உணருவர் என்று நாம் எதிர்பார்ப்ப தில்லை. கசப்பான காலங்களை, சம்பவங்களை எப்படி மறப்பது, வன்முறை என்றால் என்ன? எவ்வாறு முரண்பாடுகள் வன்முறையாகத் தோற்றம் கொள்கின்றன. முரண்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற பல கருத்துக் களை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றி யம் (CHA) ஸ்தாபனம் கடந்த சில மாதங்க ளாக பல மட்டங்களிலுள்ள உத்தியோகத்தர் களுக்குப் பயிற்சி மூலம் அளித்து வருவதை யிட்டு நாம் சந்தோசமடைகின்றோம்.

ஏனெனில், அமைதியான மன்னாரில் இன்று வர்த்தகப் போட்டி, மதப்போட்டி, போதைக்கு அடிமையாதல் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சனை, காணிச் சண்டை எனப் பல முறைகளில் முரண் பாடுகள் முளைத்துவரும் இவ்வேளையில், குறிப்பறிந்து, முரண்பாடும், பேச்சையும் என்னும் கருப்பொருளில் வதிவிடப்பயிற்சியை மேற் கொள்ளும் இத்தாபனத்திற்கு சகலரும் ஒத்து ழைப்பு நல்கவேண்டும் என மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் அண்மையில் குடும்ப நல பணியகத்தில் நடைபெற்ற CHA (சா) பயிற்சி வகுப்பில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது கூறினார்.

கருத்தரங்கில் திணைக்களங்கள், அரச சார்பற்ற தனியார் ஸ்தாபனங்கள், ஜீவோதயம், சர்வோதயம், கிராமிய மட்ட உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் போன்றோர் கலந்து பயனடைந்தனர்.

கருத்தரங்கில் JAICA அதிகாரி சசிசோ உரையாற்றுகையில், கிராமிய மட்ட மக்கள் மிகுந்த ஊக்கத்துடன் தமது கிராமங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும், இளைஞர் கள் கையில்தான் எதிர்கால நம்பிக்கை உள்ள தெனவும், எப்படி ஜப்பான் மக்கள் 15 மணித் தியாலங்கள் வேலைசெய்து தமது நாட்டைக் கட்டியெழுப்பு கிறார்களோ, அதேபோன்று யுத்த பூமியாகிய மன்னாரை சகலரும் துரிதக தியில் அபிவிருத்தி செய்யவேண்டும் எனவும் கூறினார்.

மன்னார் மாவட்ட அதிகாரி பீற்றர் சின் கிளேயர், யாழ்.மாவட்ட அதிகாரி பகீர்தரன் போன்றோர் மேற்படி இருநாள் பயிற்சியில் கலந்துகொண்டு பல பொருள் உள்ள செயன் முறைகளுடன் பயிற்சியை நடத்தினர். (ப)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### நாடகநூல் விற்பனைக்கு

சனிக்கிழமை வானொலியில் "அங்கலாய்ப்பு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" நூலைப் படித்தால் நீங்களும் அந்தமாதிரி நாடகங்கள் எழுதலாம். (37128)

### காணி விற்பனைக்கு

மல்லாகம், K.K.S. வீதிக்கு அண்மையில் 2½ பரப்புக்காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 242198. (37165)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

நான்கு மாதங்கள் நிரம்பிய சிறிய இன பொமரேனியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: துரைசிங்கம் (K.R.) 270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். T.P.: 222 6911. (37131)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் ஒருவருக்கு (இருவர் கொண்ட சிறு குடும்பத்துக்கு) மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. நல்லூர், கந்தர்மடம் பகுதிகள் விரும்பத்தக்கவை. தொடர்பு: 222 7697, 077 6358106. (37137)

### வாடகைக்கு

273, கே.கே.எஸ். வீதியில் அமைந்த கடை வாடகைக்கு விடப்படும் தேவையானோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு:திருமதி க.மங்கையர்க்கரசி, 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 4590516. (37166)

### மணமகள் தேவை

யாழ் [illegible] கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, விசாக நட்சத்திரம், கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய Electronic Designer ஆகக் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொலைபேசி இலக்கம், குறிப்பு ஆகியவற்றை அனுப்பவும். மே/பா. விள.இல.: 2394. (36960)

### காணவில்லை

கடந்த 10 நாள்கள், 5 மாதம் நிரம்பிய கடுஞ்சிவப்பு நிறமுடைய நாம்பன் கன்றுக்குட்டியை மார்டின் வீதியில் காணவில்லை. தொடர்பு: J.மரியநாயகம், 42, மார்டின் றோட், யாழ்ப்பாணம். T.P.: 021 222 2577. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (37163)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் பிரப்பங்குள வீதியைச் சேர்ந்த
**ஜோன்பீற்றர் - [illegible]ளர்மதி**
தம்பதிகளின் ஏகபுத்திரனும்
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
மாணவனுமான

செல்வன்
**நிரோஷன் [illegible]**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தையிட்டு (145 புள்ளிகள்) அவரை மனதார வாழ்த்துவதுடன் அவர் பல்கலையும் பெற்றுக் கல்வியில் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன், அவர் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வளர்மதி கல்வி நிறுவன ஆசிரியர் அன்பழகன் மற்றும் நிர்வாகத்தினருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அப்பா (ஆஸ்திரேலியா), அம்மா, தங்கை, ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அம்மம்மா (யோகேஸ்வரி), அம்மம்மாமார், சகோதர, சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
*அனைவரும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

41. பிரப்பங்குள வீதி.
யாழ்ப்பாணம்.
(37142) (26-14-18)

## ஓராண்டு நிறைவுதின அழைப்பு

தோற்றம்
08 - 10 - 1942



மறைவு
16 - 10 - 2003

### திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

கடந்த 16-10-2003 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (04-10-2004) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சசிகுமார்,
3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(37139) (26-14-18)

---

## O/L மற்றும் A/L

பரீட்சை பெறுபேறுகளின் பின்
### சென்னை பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பற்றிய கருத்தரங்கு

- 147 Years old University
- 68 University Departments
- 232 Affiliated Colleges
- 2 Lakhs Student Capacity

### UNIVERSITY OF MADRAS
Institute of Distance Education
***Flexible Learning in Sri Lanka***

**Career Guidance SEMINAR (Degree Studies)**
**9-10-2004 சனிக்கிழமை**

நேரம் : 11 a.m. - 12.30 p.m. & 4.00 p.m. - 5.30 p.m.
இடம் : வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம்

மேலதிக விபரங்களுக்கு
**ASIAN COMPUTER SYSTEMS**
2 G, (முதலாம் மாடி) ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம். தொலைபேசி :021-222 5677

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு I, வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஐச் சேர்ந்தவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். (4-204)

### அராலி மீனவருக்கு மீன்பிடி வள்ளம்

வட்டுக்கோட்டை,ஒக்.4

அராலி மத்தியில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு 'மூவிமொன்டோ' நிறுவனத்தினால் மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்பட்டுளளன. கடற்றொழிலில் ஈடுபடும் மூன்று மீனவர்களுக்கு ஒரு வள்ளம் என்ற ரீதியில் தலா அறுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஐந்து மீன்பிடி வள்ளங்கள் இந்த நிறுவனத்தினால் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளன. (4-161)

### காணி விற்பனைக்கு

59. முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு இருந்த இரண்டு (02). பரப்பு மூன்று (03) குழி விஸ்தீரணம் உள்ள காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **திரு. பூபாலசிங்கம், 27, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.** T.P.: 021 - 222 3402.
(37160)

### இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

### SAAMSTECH இன் ஆங்கில; சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773068968
(சி-37511)

### கருணா கிளினிக்

**தாதியர் - பயிலுநர் தேவை**

எமது மேற்படி கிளினிக்கில் கடமை புரிவதற்கு தாதியர் - பயிலுநர் தேவை.
*அண்மையில் வசிப்பவர்கள் நேரில் சந்திக்கவும்.*

பிரதான வீதி.
சங்கானை.
- உரிமையாளர்.
(37145)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:
வேலணை [illegible]
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் 6 அனுமதி - 2005

2005ஆம் ஆண்டு தரம் 6இற்கு அனுமதிபெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் கோரப்படுகின்றன. கல்லூரி நேரத்தில் விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(சி-37976) (24-14-18-26) - அதிபர்.

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
19 - 06 - 1928



ஆண்டவன் அடியில்
04 - 10 - 1995

### திருமதி பாலாமணி தெய்வேந்திரம்

*மாறாத அன்பினால் மகிழ வைத்த எம் தெய்வமே!*
*அன்பால் அரவணைத்து ஆதரவு வார்த்தை கூறி*
*அறிவால் எம்மை உயரவைத்த எமதருமை அம்மாவே!*
*கண்ணீரும் தீரவில்லை கவலையும் மாறவில்லை!*
*ஆனால் காலமோ ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டது*
*நெஞ்சமலர் வாடுகின்றதே அம்மா*
*உங்கள் நேசமொழி கேளாது!*
*என்றும் உங்கள் நினைவுகளே*
*எம் மனதில் சுமையாய் நிற்கும்!*

அ.றோசா,
*109/1, சிவன் றோட்,*
*நல்லூர்.*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(37164) (24-14-18-26)

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை தர்மலிங்கம்



புலோலி மத்தி, மந்திகையைப் பிறப்பிடமாகவும தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தர்மலிங்கம் நேற்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - சந்தானலக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மகனும் தேவரத்தினத்தின் அன்புக் கணவரும் முருகதாஸ், குமாரதாஸ், குணவிஜயா, ஜெயசூரியா, பவானி (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத்துறை 4ஆம் வருட மாணவி), குகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேந்திரன், நிர்மலரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக்ஷனா, தனுஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் கந்தையா - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"திருமகால்"*
*சங்கத்தானை,, சாவகச்சேரி.*
(37158) (43-14-18-26)
தகவல்:
குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 617 |
| திகதி | 01-10-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5942897-5958419

வெற்றி இலக்கங்கள்
**02 04 45 49**

லக்கினம் மீனம்

ஜக்பொட் பரிசு
ரூபா.15,78,200/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 23,48,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,44,572 | 10/- | 34,45,720/- |
| 2.இலக்கங்கள் | 31,842 | 20/- | 6,36,840/- |
| 1.இல + லக்கினம் | 31,296 | 30/- | 9,38,880/- |
| 2.இல + லக்கினம் | 2,805 | 100/- | 2,80,500/- |
| 3.இலக்கங்கள் | 864 | 500/- | 4,32,000/- |
| 3.இல + லக்கினம் | 60 | 5,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 15,78,200/- | - |
| மொத்தம் | 4,11,449 | - | 76,64,190/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,64,190/-

தொடர் இல. 4981032 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 05ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5947165-6-54
5950341-5-47
5947555-2-31
5943226-8-01
5946797-7-49


# தலைவர் பிரபாகரனின் பன்முகப்பட்ட ஆளுமையே போராட்டத்தின்பால் சர்வதேசப் பார்வையைத் திருப்பியது

## பேர்ண் நகர நூல் வெளியீட்டு விழாவில் காவல்துறைப் பொறுப்பாளர்

எமது தேசியத் தலைவர் பிரபாகரனின் பன்முகப்பட்ட ஆளுமை வீச்சாலும் தீர்க்க தரிசனமான வழிநடத்தலாலும்தான் இன்று எமது விடுதலைப் போராட்டத்தின் பக்கம் சர்வதேச சமூகத்தின் பார்வை திரும்பியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

தமிழீழத் தேசியத் தலைவரின் பன்முக ஆளுமை வீச்சு பற்றிய ஆங்கில நூல் வெளியடு நேற்றுமுன்தினம் சுவிற்ஸர்லாந்தின் பேர்ணில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு




நூலை வெளியிட்டு வைத்தார் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சுவிற்ஸர்லாந்தில் எமது தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையை வெளிப் படுத்தும் இந்த வரலாற்று நூலை வெளியிடுவதில் நீங்களும், நாமும் பெரும் பேறு பெற்றவர்களே.

இந்நூல் எமது மக்கள் அனைவருக்கும் விளங்கும் வகையில் மிகச்சிறப்பாக எழுதப் பட்டுள்ளது.

எமது தலைவரின் பன்முகப்பட்ட ஆளுமை என்பது எமது போராட்டத்தின் ஆளுமை. எமது தலைவரின் வரலாறு என்பது விடு தலைப் போராட்டத்தின் வரலாறு; எமது இனத்தின் எழுச்சியின் வரலாறு. பேரினவாத இன அழிப்பு ஒடுக்குமுறைக்கு எதிராக எமது தேசிய இனத்தை வீறு கொண்டு எழச்செய்து எமது விடுதலைப் பயணத்தில் எம்மை மிக வும் தீர்க்கதரிசனமாக அழைத்துச் சென் றது தலைவரின் ஆளுமையே என்பது உண்மை.

எமது பன்முகப்பட்ட ஆளுமை யினூ டேயே எமது போராட்டத்தைச் சர்வதேச சமூகம் பார்க்கும் என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

ஏனெனில், உலகம் முழுவதும் தமிழின விடுதலைப் போராட்டம் பற்றித்தான் இப்போது கதை. அமெரிக்கா முதல் இந்தியா வரை, சுவிற்ஸர்லாந்து முதல் ஜப்பான் வரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தேசியத் தலைவரையும் பற்றித்தான் கதைக்கிறார்கள்.

எமது தாயகத்தில் - தமிழீழத்தின் நிர்வாக அலகுகள், தமிழீழ அரச இயந்திரத்தின் நடுவப் பணியகங்கள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. கிளிநொச்சி நோக்கி உலகின் அனைத்து ராஜதந்திரிகளும் ஒவ்வொரு நாளும் வருகின்றார்கள். ஜப்பான், சுவிஸ், நோர்வே எனத் தினமும் எம்மைச் சந்தித்துப் பேசுகிறார் கள். இது எதைக் குறிக்கின்றதெனில், எமது போராட்டத்தைச் சகல ஆளுமையுள்ள ஒரு போராட்டமாகப் பார்க்கிறது என்பதைத்தான்.

இந்த உண்மையின் மூலக்கரு, இப் போராட்டத்தை ஒவ்வொரு கட்டத்திலும் தீர்க்கதரிசனமான திட்டங்களுடனும் கொள்கை களுடனும் - பெரும் சோதனைகளை எதிர் கொண்ட போதும் - வெற்றிகரமாக வழி நடத்திச் செல்லும் எமது தேசியத் தலைவரின் பன்முகப்பட்ட ஆளுமையின் வீச்சுத்தான்.

போராட்டத்தின் ஆரம்பகாலகட்டம், இந்திய இராணுவக் காலம் என ஒவ்வொரு கட்டத் திலும் புலிகள் அழிந்தார்கள் எனச் சொல்லப் பட்டபோதும் புலிகள் -பெரும் வளர்ச்சியுடன் மீண்டெழுந்த வரலாறு கொண்டது எமது போராட்டம். தலைவரின் பன்முகப்பட்ட ஆளுமை வீச்சால்தான் இவை சாத்தியமாகின.

அண்மையில் ஐ.நாவில் உரையாற்றியபின் கொழும்பிலிருந்து சந்திரிகா ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் புலம்பெயர் தமிழர் களின் நிதியால்தான் புலிகள் வளர்கிறார்கள். இதைத் தடுக்கவேண்டும் என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதன்மூலம், ஒன்று தெரிகிறது. பேரின வாதம் தமிழீழத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழ்ந்த நாடுகளை நோக்கியும் திரும்பியுள்ளது என்பது தெளிவாகிறது. பேரின வாதத்தின் நோக்கத்தை நீங்கள் ஒன் றிணைந்து எழுச்சியுடன் செயற்பட்டு முறியடிக்கவேண்டும்.



யுத்த நிறுத்தக் காலத்தில் இருவழிகளில் எமக்கு எதிரான வியூகங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஒன்று, கடல் வழியாக எமது தொடர்புகளைத் தடுக்க பல நாடுகளின் உதவி யுடனான முயற்சி. கடற்படைக்குப் பெருமெடுப் பில் பயிற்சிகள், ஆயுதங்கள் வழங்கப்படு கின்றன. இரண்டாவது, நிதி வழங்கலைத் தடுத்து நிறுத்துவது. இரகசியமாக முக்கிய நாடுகளுக்கு குழுக்களை அனுப்பிப் புலம் பெயர் தமிழ்மக்கள் விடுதலைப் போராட்டத் திற்கு வழங்கும் நிதி உதவிகளைத் தடுத்து நிறுத்த, இலங்கை அரசு முயல்கிறது. இவற்றை நாம் முறியடித்து எமது படையணிகளையும் நிதி வளங்களையும் பேணுவதுடன் பல சம நிலையும் பேண வேண்டியுள்ளவர்களாக உள்ளோம.

எமது போராட்டம் ஆரம்பித்த பின்னரே தமிழ்த் தேசியம் வளர்ந்தது. இதை உடைக்க எம்மிடையேயான சமூக முரண்பாடுகள், பிர தேச வேறுபாடுகளை வளர்த்துவிட முனை கிறது பேரினவாதம். இதன் அண்மைய வெளிப் பாட்டை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது தனி மனித விடயம் என்பதாலும் அவருககு அடுத்த நிலைத் தளபதிகள் தலைவரிடம்வந்து விட்ட னர் என்பதனாலும் அந்த முயற்சிகள் செய லற்றுப்போனது.

நாம் தற்போது அரசியல் அறிஞர்களுடன் இடைக்கால நிர்வாகம் பற்றிய ஆலோசனை களை நடத்தி வருகின்றோம். பேச்சுமூலம் சமாதானத்தை அடையும் வழிமுறைகளுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதால் அதுபற்றித் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றோம்.

எமது நிர்வாகக் கட்டமைப்புகளை சர்வ தேசப் பிரதிநிதிகள் வந்து பார்வையிட்டுப் பாராட்டிச் சென்றுள்ளமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

இன்று சகல வழிகளிலும் நாம் வளர்ந்து வருகின்றோம். பல கட்டமைப்புகளை வளர்தது வருகிறோம். இவை ஒவ்வொன்றிலும் தலை வரின் ஆளுமை வீச்சை நாம் காணலாம்.

தலைவரை நோக்கி சிங்கள அரசும் சில சக்திகளும் சில நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றன. இவைபற்றி முழுமையாக என் னால் கூறமுடியாது. ஆனால், தலைவரின் பன முக ஆளுமை வீச்சின் முன்னால் இவை சூரி யன் முன் உள்ள பனித்துளிகள் போன்று உருகிப் போய்விடக் கூடியவை.

எமது தேசியச் சொத்தான தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையை வெளிப் படுத்தும் இந்த வரலாற்று நூலை வெளியிடுவ தில் பெருமையடைவதுடன் எமது தலைவரின் காலத்திலேயே விடுதலையும் பெறுவோம் - என்றார்.

(க-3)

# இந்தியாவில் காந்தி ஜயந்தி தினத்தில் மிகக் கொடூரம் குண்டு வெடிப்புகளில் 60 பேர் பலி; 141 பேர் படுகாயம்!

## நாகலாந்திலும், அஸாமிலும் தீவிரவாதிகள் கைவரிசை

திமாபூர்,ஒக்ரோபர்.4

**இந்தியாவின் நாகலாந்து மற்றும் அஸாம் மாநிலங்களில் தீவிரவாதிகள் நடத்திய மிகக் கொரூரமான குண்டுவெடிப்புச் சம்பவங்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 60 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 141 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**

அகிம்சையைப் போதித்த மகாத்மா காந் தியின் பிறந்த தினமான நேற்றுமுன்தினமே தீவிரவாதிகள் இந்த வெறியாட்டத்தில் ஈடுபட் டனர். இந்த நாசவேலையினால் பலிகொள் ளப்பட்ட ஒன்றுமறியா அப்பாவிப் பொதுமக்க ளின் உயிர்களே.

பொதுமக்கள் அதிகமாக நடமாடும் ரயில்வே நிலையம் மற்றும் சந்தைப் பகுதிகளிலேயே நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதி சக்திவாய்ந்த கண்ணிவெடிகள் வெடித்துள் ளன. இந்தக்குண்டுகள் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கும் 9.40 மணிக்கும் இடைப்பட்ட 10 நிமிட வித்தியாசத்திலேயே வெடித்தன என்று கூறப்பட்டது.

நாகலாந்து திமாபூர் ரயில்வே நிலையத் தின் பயணிகள் மேடையிலும், மக்கள் நடமாட் டம் மிகுந்த ஹொங்கொங் சந்தைப் பகுதியி லும் ஒரே நேரத்தில் கண்ணிவெடிகள் வெடித் தன.

ரயிலில் செல்லக்காத்திருந்த பாடசா லைச் சிறுவர்கள், பெண்கள் உட்பட அநேக மானோர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலி யாகினர்.

அஸாமில் இருந்து திமாபூர் ரயில்வே நிலை யத்தை நோக்கி வந்த பயணிகள்ரயில் வருவதற்கு சில நிமிடங்களின் முன்னரே இக் குண்டுகள் வெடித்துள்ளன. அதிஷ்டவசமாக அந்த ரயிலில் வந்த பயணிகள் உயிர்தப்பி னர்.

இந்த மிகக் கொடூரமான பயங்கரவாதச் செயலுக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் இச் செயதி எழுதும்வரை உரிமைகோரியிருக்க வில்லை. ஆனாலும், சில அமைப்புகளின் மீது சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்று மருத்து வமனைகளில் அனுமதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபகரமாக உயிர் துறந்த னர். இன்னும் பலர் உயிருக்குப் போராடிய வண்ணம் ஆபத்தான நிலையில் சிகிச்சை



குண்டுவெடிப்பில் சிதைந்து கிடக்கும் சடலங்கள்

பெற்று வருகின்றனர்.

சிறுவர்கள், பெண்கள் எனப் பலர் தமது உடலுறுப்புக்களில் ஒன்றையோ அல்லது பல தையோ இழந்த நிலையில் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் தேகாரோக்கியத்தோடு இருந்த பலர் ஊன முற்றவர்களாய் மாறியிருக்கும் பரிதாபநிலை அனைவரிடத்திலும் கண்ணீரை வரவழைக் கிறது.

நாகலாந்து குண்டுவெடிப்புக்கு 15 நிமிடங் களின் முன்னரே அஸாமில் ஒரே மாதிரியான குண்டுவெடித்தது.

இந்திய - பூட்டான் எல்லை நகரான சிராங் மாவட்டத்தில் அமைந்துள்ள சந்தைப் பகுதியி லேயே இப்பாரிய குண்டுவெடித்தது. இதில் பலா உயிரிழந்தனர். டசின் கணக்கானவர்கள் படுகாயமுற்றனர்.

அகிம்சையின் தந்தை மகாத்மாவின் பிறந்த தினத்தன்று இந்தியாவில் நடந்தேறி யிருக்கும் இச்சம்பவம் நாட்டு மக்களை மட்டு மன்றி உலகம் பூராகவுமுள்ள அனைத்தின மக்களையும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆட்படுத்தியுள்ளது.

நாகலாந்து முதலமைச்சர் நிபயுரியோ சம் பவ இடத்திற்கு சென்று காயமடைந்தவர் களை மருத்துவ மனையல் சந்தித்து ஆறுதல் கூறினாா.

இச்சம்பவத்திற்கு காரண மானவர்களை அவர் கடுமை யாகச் சாடினார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக முதல்வர் காணப்பட்டார் என செய்தியாளர்கள் தெரிவித் தனர்.

இது குறித்து மத்திய உளதுறை அமைச்சர் தகவல் தருகையில்:-

தீவிரவாதிகளின் செயல் மனிதத்தன்மையற்றது; கொடு ரமானது. இதல் ஈடுபட்ட குற்றவாளிகளைப்பிடிக்க மாநில அரசுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் மத் திய அரசு செய்யும். பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மாநில அரசு வழங்கவேண்டும் - என்றார்.

மாநிலங்களின் நிலவரங்களை நேரில் கண்டறியவென அமைச்சர் நேற்று நாகலாந்துக் குச் சென்றார்.

இச்சம்பவங்களில் காயமடைந்தவர்களின் பலரது நிலை மிக மோசமாக இருப்பதாக உள்ளூர் வைத்தியர்கள் அங்கலாய்ப்புடன் தெரிவித்தனர்.

நாகலாந்தில் பலகாலமாக பிரிவினைவாத கிளர்ச்சி நடந்துவந்தது. ஆனாலும் கடந்த ஏழு வருடங்களாக முக்கியப் பிரிவினைவாத கிளர்ச்சிக்குழு போர்நிறுத்தத்தைக் கடைப் பிடித்து வருகின்றது.

இந்தப்போர்நிறுத்தத்தில் ஈடுபட்டிராத வேறு சில பிரிவினைவாதக்குழுக்களே இக்குண்டு வெடிப்புக்களை நடத்தியிருக்கக் கூடும் என பொலீஸ்தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, இத்தாக்குதல்களில் தடைசெய் யப்பட்ட 'போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி' என்ற தீவிரவாத அமைப்பினர் ஈடு பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

அஸாம் மாநிலத்தின் 9 மாவட்டங்களில் நேற்று சிறு சிறு தாக்குதல்கள் நடத்தப்பட் டுள்ளன எனவும் இதில் 24 பேர் கொல்லப்பட் டனர்; 50 பேர் படுகாயமடைந்தனர் எனவும் பிந்திய செய்தித் தகவல் தெரிவித்தன.

இச்சம்பவத்துக்கு இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலர் கோபிஅனான் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

உலக அரங்கில்

## ரஷ்யப் பாடசாலையில் குண்டு வெடிப்பு; 9 மாணவர்கள் பலி!

மின்ஸ்,ஒக்.4

ரஷ்யாவின் மின்ஸ் நகருக்கருகிலுள்ள கிராமமொன்றின் பாடசாலையில் குண்டொன்று வெடித்தது. இதில் அங்கு படித்துக்கொண்டி ருந்த மாணவர்களில் 9 பேர் உடல சிதறி பலியாகினர்.

ஏராளமான மாணவ மாணவிகள் காயமடைந் தனர். உடனே சம்பவ இடத்துக்குப் பொலீ ஸார் வரவழைக்கப்பட்டனர். காயமடைந்த சிறு வர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தீவிர வாதிகளின் செயலாக இருக்குமெனப் பொலீ ஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

பெஸ்லன் நகரப் பாடசாலை அனர்த்தம் நடந்த சில நாள்களின் பின்னர் மீண்டும் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பது அந்நாட்டு மக்க ளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கின்றது.

(க-3)

# இலவசக் கணனிப் பயிற்சி நெறிகள்

காரை கனடா கலாசார மன்றத்தின் ஆதரவுடன் யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இலவசக் கணனிப் பயிற்சி நெறிகள் 06.10.2004 (புதன்கிழமை) அன்று ஆரம்பமாகவுள்ளன. இக் கணனிக்கற்கை நெறிகள் வருமாறு:-

- Introduction to Computer
- Introduction to Windows
- Diploma in Ms Office
  - Ms Word
  - Ms Excel
  - Ms Access
  - Ms Power Point
- Diploma.in Desktop Publishing
  - Adobe Page Maker
  - Adobe Photoshop
  - Corel Draw

முற்றிலும் இலவசமாகக் கற்பிக்கப்படும் இக்கற்கை நெறியானது பாடசாலை முடிந்ததும் ஆரம்பமாகும். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று (04.10.2004) திங்கட்கிழமை விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கவும். வகுப்புகள் யாவும் 06.10.2004 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பமாக உள்ளதால், இதில் ஆர்வமுள்ளோர் இக்கற்கை நெறியில் பங்குபற்றி பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:-

★ உயர்கல்வித்தகைமையுடன் தரமான அனுபவமுள்ள ஆசிரியர்களால் வழிநடத்தப்படும்.
★ வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான பயிற்சி.
★ தனிப்பட்ட கவனிப்புக்கள்.
★ ஒவ்வொருவருக்கும் சுயமாக்க கற்பதற்கு கணனிகள் ஒதுக்கப் படுவதுடன் செய்முறைக்குப் போதிய நேரம் ஒதுக்கப்படும்.
★ தமிழில் விளக்கங்கள் கொடுக்கப்படும்.
★ இப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

அதிபர்.
(சி-37983)(43-18-45) யா/கலாநிதி ஆ.தி.ம.ம.வி. காரைநகர்.


## கிராமஅலுவலர் இடமாற்றம்

அச்சுவேலி மேற்கு (ஜே287) பிரிவு கிராம சேவையாளராகக் கடமையாற்றிய எஸ்.சுந்தரலிங்கம் புத்தூர் வடக்கு (ஜே274) பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் இ.கணேசலிங்கம் அச்சுவேலி மேற்குப்பிரிவில் பதில் கிராம சேவையாளராகக் கடமையாற்றி வருகின்றார். மேற்படி இடமாற்றங்கள் இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலா திருமதி அ.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (4-11)

## வலி.மேற்கில் தொடர் மழையால் நெற்செய்கை பாதிப்பு

கடந்த சிலதினங்களாகப் பெய்துவரும் தொடர் மழையினால் வலிகாமம் மேற்குப் பகுதி யில் பல இடங்களில் நெல்விதைப்பு பாதிப் படைந்துள்ளது. வட்டுக்கோட்டை, சங்கரத்தை, அராலி, அரசடி, மூளாய், சுழிபுரம், சங்கானை ஆகிய வயல் நிலங்கள் பலவற்றில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வெள்ளம் தேங்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் நெல் விதைப்பு பாதிப்படைந்துள்ளது. இப்படியே மழை தொடர்ந்து பெய்யும் நிலைமை நீடித்து வெள்ளம் அளவுக் கதிகமாகத் தேங்கினால் முளைத்த பயிரின் நிலைமை கேள்விக்குறியாகும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (4-141)

## புத்தூரில் பொது மண்டபம்

புத்தூர் கிழக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது மண்டபம் நாளைமறுதினம் புதன் கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது. யூ.என்.எச்.சீ.ஆர்.நிதியுதவியுடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 4லட்சம் ரூபா செலவில் இம்மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (4-11)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆங்கில ஆசிரியர்களான திரு.திருமதி விஜயரட்ணம் அவர்களின் மகனும் முன்னாள் ஆங்கில ஆசிரியை திருமதி வி.யோகரட்ணம் அவர்களினதும் தற்போதைய ஆங்கில ஆசிரியரான திரு.வி.பிறேமதாஸகுமாரசிறி அவர்களின் சகோதரருமான

**வி.ரஞ்சித்குமாரசிறி**

அவர்கள் 25.09.2004 அன்று பிரான்ஸ் பரிஸ் நகரில் காலமடைந்ததையிட்டு எமது அஞ்சலியைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ்ற்ரன் கல்லூரி. காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி-37982)(26-18-45-54)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.க.தில்லையம்பலம் அவர்களின் பாசமிகு புதல்வன்

**தில்லையம்பலம் உமாகாந்தன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபையினர்,
வதிரி உல்லினொல்லை கண்ணகை அம்பாள் ஆலயம்.

(37162)
(39-18-45-43)


# சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர்

## திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்(ப.தெ.வளம்)

### வாழ்த்துரை

யாழ். மாவட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திருவாளர் சு.கணேசமூர்த்தி ஐயா அவர்களின் சேவை என்றும் மறக்கமுடியாத ஒன்றாகும். இதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

01.03.2000 ஆம் ஆண்டு தொடக்கம் 14.03.2004 வரையான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தின் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களுக்கும் அதை நம்பி வாழ்ந்த அதன் அங்கத்தவர்களின் அபிவிருத்திக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது. சட்டமும் நிர்வாகமும் சீர்குலைந்த அசாதாரண சூழ்நிலையில் கூட சட்டத்தின் தேவைப்பாட்டில் இம்மியளவேனும் பிசகாது பல கஷ்டங்களுக்குள் மத்தியிலும் சங்கங்களின் நோக்கம் நிறைவேற அயராது பாடுபட்ட சிறந்த கடமையாளன் என்பதை நாம் நினைவு கூர விரும்புகிறோம்.

தற்பொழுது அவர் இப்பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பொழுதிலும் கூட இச்சங்கங்களின் வளர்ச்சியில் அக்கறைகொண்டுள்ளதைப் பல சந்தர்ப்பங்களில் நாம் உணரக்கூடியதாக உள்ளது. பனை தென்னை வளச் சங்கங்களைத் தனது சேவைக்காலத்தில் கட்டுக்கோப்புடன் வழிநடத்திய பெரியவர் இவராவார். அவரின் சேவையை நாம் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன். அவர் மேன்மேலும் எமக்குப் பொருத்தமான ஆலோசனைகளைத் தனது ஓய்வுக் காலத்தில் வழங்கவும் என்றும் நலமுடன் நீண்ட காலம் குடும்பத்தாருடன் இனிது வாழவும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

தலைவர்: கி.தவராசா
வடமாகாண ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் சமாசம்.



### ஆளுமை மிக்க ஆணையாளர்

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற இலட்சிய நோக்கின் அடிப்படையில் கூட்டுறவின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி இளைப்பாறுகின்ற உதவி ஆணையாளர் திரு. சு.கணேசமூர்த்தி அவர்களைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். திரு. சு. கணேசமூர்த்தி அவர்கள் எனது உறவினர் என்ற காரணத்தால் சிறுவயதிலிருந்தே அவரை நான் நன்கறிவேன். அது மட்டுமன்றி நான் யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் கூட்டங்களில் பங்கு கொண்டு அவர் வழங்கிவரும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்தித் தீர்மானங்களை எடுப்பதில் கொண்டுள்ள ஆளுமையையும் கண்டு வியந்துள்ளேன். அத்தகைய ஒருவரை கூட்டுறவு உதவி ஆணையாளராகப் பெற்றுக்கொண்டமைக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பேரதிர்ஷ்டம் என்றே கூறுதல் வேண்டும்.

திரு. சு.கணேசமூர்த்தி அவர்கள் கூட்டுறவை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டது மட்டுமன்றி உண்மையான கூட்டுறவாளராக வாழ்ந்து வந்தவர். இவர் வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சமகாலத்தில் பெரும் வளர்ச்சி கண்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும். கூட்டுறவுச் சமூகத்தவரிடையே முகாமைத்துவ அறிவை வளர்ப்பதில் எமது பல்கலைக்கழகத்துடன் இணைந்து அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப்பட்டறைக்கும் கருத்தரங்குகளும் கல்விச் சமூகத்தவரிடையே மன நிறைவை ஏற்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கூட்டுறவின் வளர்ச்சிக்குத் தன்னலமற்ற சேவையை வழங்கிக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்த்தப்பட்ட திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள் சேவையில் இளைப்பாறினாலும் தொடர்ந்தும் கூட்டுறவு வளர்ச்சிக்கு உதவ இறைவன் அருள்புரிய வேண்டுமென இறைஞ்சி அவரது பணிகளைப் பாராட்டுவதுடன், அவர் பல்லாண்டு காலம் வளமுடன் வாழவேண்டும் என வாழ்த்துக் கூறுகின்றேன்.

க.தேவராசா (தலைவர்)
வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

### வாழ்த்துச் செய்தி

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பணிபுரிந்த திரு சு.கணேசமூர்த்தி அவர்கள் கூ.அ.உ.ஆணையாளராகப் பதவி வகித்த காலப் பகுதியில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் அவற்றின் அங்கத்தவர்கள், பணியாளர்களினதும் சமூக, பொருளாதார, கலை, கலாசார மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில சங்கங்களுககு ஆலோசனைகள் வழங்கி ஒத்துழைப்பு வழங்கியதுடன், ப.தெ.வ.அ.கூ. சங்கங்களில் கிராமிய வங்கியை ஆரம்பித்து அங்கததவர்களின் சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவர் .அவ்வாறான சேவையாளனின் சேவையைப் பாராட்டி நடத்தப்படுகின்ற சேவைநலன் பாராட்டு விழாச் சிறப்புற வாழ்த்துவதுடன் விழா நாயகன் ஓய்வுபெற்ற கூ.அ.உ.ஆணையாளர் திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

க.மெய்யழகன் (தலைவர்)
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி.

### கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுப்பையா கணேசமூர்த்தி B.A. (CEY) வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| பிறப்பு:— | 1944.03.15 அளவெட்டி. |
| கல்வி:— | ஆண்டு 1 - 6 அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை. |
| | ஆண்டு 7 - 13 தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. |
| | 1968 - கலைமாணி. இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை. |
| | 1970 - கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (உயர் பிரிவு). |
| அரசசேவை:— | 1978/72 - பட்டதாரிப் பயிற்சி நெறி. |
| | 1973/77 - கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் பதவி நியமனம் கூட்டுறவு அபி.உதவி. ஆணையாளர் அலுவலகம்,திருகோணமலை |
| | 1971/88 - கூட்டுறவு அபி.உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். |
| | 1989 - கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம்1 |
| | 1990/91 - கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம், திருகோணமலை. |
| | 1992/93 - கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம். |
| | 1994 - பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய். |
| | 1995/97 - கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம்.கிளிநொச்சி. |
| | 1998 - கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம். |
| | 1999 - மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவி. |
| | 2000 - மார்ச் 1தொடக்கம் 2004.03.14 வரை கூ.அ.உ ஆணையாளர் (ப.தெ.வளப்பிரிவு) யாழ்ப்பாணம். |

### சிறந்த நிர்வாகி

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக (ப.தெ. வளம்) பணியாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் சென்ற திரு.சு.கணேசமூர்த்தி அவர்களின் சேவையினை பாராட்டி இத்துறைசார்ந்த நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை நலன் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. சு.கணேசமூர்த்தி அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு, அபிவிருத்திப் பணிகளில் நுண்ணறிவுத்திறனும் பரந்த அணுகு முறையும் கொண்டவர். இவர் ஆணையாளராக பணிபுரிந்த காலப்பகுதியில் பனை வளச் சங்கங்களின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் பல நலத்திட்டங்களை செயற்படுத்தியவராவார்.

சங்கங்களில் காணப்பட்ட ஆளணி மற்றும் சம்பள முரண்பாடுகளுக்குச் சீரான தீர்வு காணப்பட்டது. மேலும் இவரது சேவைக்காலத்தில் இச்சங்கங்கள் கிராமிய வங்கிகள் அமைக்க, சமூககல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றினையும் அமைக்க அவர்கள் காட்டிய அக்கறை பாராட்டுக்குரியதே இச்சங்கங்கள் உள்ளவரை அவரது பெயர் நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சி.ஐயாத்துரை கூ.அ.உ.ஆணையாளர்
(ப.தெ.வளம்),யாழ்ப்பாணம்.

### கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.சு.கணேசமூர்த்தி அவர்களின் சேவை நலன் பாராட்டு

கூட்டுறவுப் பணியில் பல ஆண்டுகளாய்
கூட்டுறவுப் பரிசோதகராகப் பல ஆண்டுகளும்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக
சில ஆண்டுகளும் சேவையாற்றி அவர் தம்
அறிவுகள், அனுபவங்கள் யாவற்றையுமே
கூட்டுறவாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கப்
பணியாளர்களுக்கும் வழங்கியது மட்டுமல்லாமல்
தொடர்ந்தும் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற
காலங்களிலும் தமது சேவைகளை கூட்டுறவுக்கு
வழங்கி வரவேண்டுமெனவும் உங்களின்
அன்பு உள்ளத்தை நன்றிப் பெருக்கோடு
மனமார வாழ்த்தி தங்களின் வாழ்வியல்
சிறக்க மீண்டும் மனமார வாழ்த்தி
நிற்கின்றேன்.

என்றென்றும் கூட்டுறவில்
பெ.கனகசபாபதி (தலைவர்)
யாழ்.மா.கூ.சபை.

### மக்கள் சேவையில் ஒளி வீசிய விடிவெள்ளி

ஈழத்தமிழ் வானில் பூத்த விடிவெள்ளி வியத்தகு சேவையின் பின் இன்று இளைப்பாறுகின்றார் . எண்ணியதை முடிக்கவும், நல்லதை எண்ணவும் திண்ணிய நெஞ்சங்கொண்டுழைத்த கூட்டுறவு ஆணையாளரின் சேவைகளை உன்னிப்பாக அவதானித்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

வையகம் பயனுற வாழவேண்டுமென்ற சிந்தையுடையவர் கணேசமூர்த்தி அவர்கள் .இவர் கூட்டுறவு ஆணையாளராக இருந்த காலத்தில் தால மூலவளங்களைப் பெருக்கவேண்டும் என்ற உத்வேக உணர்வை அவரிடம் கண்டவன் நான். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற மந்திரத்தை மனதிலே இருத்தியவர். சொல்லுக்கு உயிர்கொடுத்து செயலிலே காட்டிய தீரர்.

பழக இனிய உதவி ஆணையாளர் கணேசமூர்த்தியைப் பல கூட்டுறவு விழா மேடைகளில் விருந்தினராகக் கண்டிருக்கின்றேன். மெல்லெனப்பாயும் நீர் போல் காரியம் பல ஆற்றிய பேராளன் .சொல்லும் செயலும் இவருக்குப் புதிதல்ல . துன்பச்சுமையோடு உழைக்கும் கரங்களை வலுப்படுத்த வகை பல கண்டவர். இன்று சமூக மேம்பாட்டிற்கு ஒளிவீசி உழைத்து ஓய்வு பெறுகின்றார். அகவை அறுபது அவரது கரங்களை அரச நியதிப்படி நிறுத்தினாலும் , அகம் சார்ந்த சிந்தனைச் செழுமை எங்கள் வளமாக என்றும்நின்று நிலைக்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. கூட்டுறவின் தானைத்தலைவர், எங்கள் மக்களுக்காய் உழைத்த மகத்தான மானுடம் பல்வகைச் செல்வங்களும் பெற்று வாழ இறையருளை இறைஞ்சுகின்றேன் . நீடிய ஆயுளும் நேரிய சிந்தனையும் நீண்டு நிலைக்கட்டும்.

கோ.சி. வேலாயுதம்.

### தன்னலமற்ற சேவையாளன்

செய்ந்நன்றி மறப்பவர்களுக்கு உய்வில்லை என்பது எமது பாரம்பரிய நம்பிக்கையாகும். இந்த வகையில் திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள் அரச உத்தியோகத்த வராக இருந்தாலும் தனது தனிப்பட்ட சுகம்,சௌகரியம் என்பவற்றைப் பொருட்படுத்தாது தனிப்பட்ட அபாயங் களையும் தாங்கிக்கொண்டு அர்ப்பணிப்போடு நம் மக்க ளுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி நன்றி கூறும் வகையில் எடுக்கப்பட்டுள்ள இவ்விழா எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதே. இவ்விழா எமது சந்ததியி னருக்கு ஒரு முன்னுதாரணமாகவும் புதிய சிந்தனை களையும் உற்சாகத்தையும் தூண்டுவதாகவும் அமையும்.

இவ்விழா சிறப்பாக நிறைவேற எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு திரு.சு.கணேசமூர்த்தி அவர்களின் சேவை எமக்குத் தொடர்ந்தும் கிடைப்பதற்கு அவர் நல்ல தேகாரோக்கியத்துடனும் சீருடனும் சிறப்புடனும் எம்மிடையே நீண்டகாலம் வாழ இறை வனை வேண்டி அமைகின்றேன்.

செ.கனகசபாபதி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
அபிவிருத்திப்பகுதி,யாழ். மாவட்டம்.

எமது கூட்டுறவுச் சங்கங்களிற்கென ஆணையாளராக நியமனம் பெற்ற திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள் தமது சேவைக்காலத்தில் சங்கங்கள் சார்ந்த பெருவளர்ச்சிக்காகப் பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்கி வெற்றி கண்டவர். அந்த வகையில்,இன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்விப்பயிற்சியளிப்பு, சேமிப்பு, சிக்கனசேமிப்பு,கிராமியவங்கியமைப்பு,சமூகமேம்பாட்டுத் திட்டங்கள் என்பன இவரது சிந்தனையில் உருவாகியவை எனலாம். இவற்றிற்கு அப்பால் பணியாளர்களது ஆளணி விடயத்திலும், சம்பளமுரண்பா டுகளிலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான தீர்வு கண்டவர். இந்த வகையில், ஐயா அவர்களது ஆலோசனைகள் தொடர்ந்தும் எமது நிறுவனங்களுக்குக் கிடைக்க வேண்டுமெனவும்,தமது குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் இனிதே வாழவேண்டுமெனவும் வாழ்த்து கின்றோம்.

அங்கத்தவர்கள்,பணிப்பாளர்கள்,பணியாளர்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்கள்,
பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகள்,
சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம்,
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.

மலர் அனுசரணை:- (வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அங்கத்துவ சங்கங்களும்)

# விசேட கட்டணக் கழிவுடன்
## புதிய பிரிவு ஆரம்பம்
**08-10-2004**

- உளவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட சிறுவர்களுக்கான விசேட கற்கை நெறிகள்
- முதல் தடவையாக கணனித்துறையில் பிரவேசிப்பவர்களுக்கான அடிப்படைக் கற்கை நெறிகள்
- மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கான தனிப்பட்ட வகுப்புக்கள்

குழு வகுப்புக்கள் வசதியான நேரம் இலகு மொழியில்

- அனுமதிப்பரீட்சையோ, வயதுக்கட்டுப்பாடோ, வீண் நேர விரயமோ இல்லை

(c-37985)(30-13-16)

**Diploma Course**

Diploma in Ms Office
Diploma in Desktop publishing
Diploma in Hardware Engineering
Diploma in Computer Programming
3 → 3 Months



Diploma in Multimedia
Diploma in Graphic Designing
Diploma in Kids Computing
4 → 4 Months

குறைந்த கட்டணத்தில் நிறைவான அங்கீகாரம்

**Certificate in Computer Studies**
Ms Word, Ms Excel, Ms Power point, Ms Access, Coral Draw, Photo Shop, Page Maker, Visual basic, Maya, Flash Mx.



இன்றே நாடுங்கள்
*City Informatics Centre*
Siruppiddy North,
Neervely (Point pedro Road, Jaffna)
E.mail-ciccom2004@ yahoo.com
T.P.: 0602213414, 0777229080.


## காரைநகர் கமநல சேவைகள் நிலைய
# திறப்புவிழா அழைப்பு

இடம் : வலந்தலை மத்தி, காரைநகர்.
காலம் : இன்று (04.10.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி
தலைவர் : திரு.சு.சிவஞானம்
பிரதமவிருந்தினர்: திரு.செ.பத்மநாதன் (அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கமநல சேவைகள் நிலையம்,
காரைநகர்.
(சி-37987)(13-16-30)

## 45 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 | | 19 |
| 07 | | 08 |
| 1978 | | 2004 |



அமரர்
### சுப்பையா தர்மலிங்கம் (தாஸ்)

கடந்த 19.08.2004 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (04.10.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய்: சு.அம்பிகாபதி
சகோதரர்கள்:
சு.செல்வவிநாயகம்,
ஜெ.புஸ்பராணி (புகனா)

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.* (37172)(13-16-30)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் குருசாமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உதயசூரியன் வீதி, உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குருசாமி அவர்கள் நேற்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் உடுவிலில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உதயசூரியன் வீதி,*
*உடுவில்,*
*சுன்னாகம்.*

தகவல்:
கு.ஸ்ரீதர் (ஸ்ரீ - மகன்)
(37174)(13-16-30)

## தம்பிஐயா துரைசிங்கம்

தொல்புரத்தைச் சேர்ந்த தம்பிஐயா துரைசிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நீலாம்பிகை (கனடா), மாணிக்கராசா (கொழும்பு), பாலசிங்கம் (Rtd. Superintendent of Police), இராசபூரணம் (மலேசியா), நங்கவதி (பொன்னார் - மலேசியா) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2004) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம்.*
(சி-37989)(16-17-30)

தகவல்:
ந.பரமநாதன் J.P.
(சகோதரன்)

## நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி,ஒக்.4

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் நிர்வாகிகள் தெரிவு நேற்றுக் காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், மாவட்ட நடுவப் பணியக நிர்வாக சேவைப் பொறுப்பாளர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் விசேட பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(10-13-301)

## நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, கைதடி - நாவற்குழி ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கை மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக்காலை 10 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மற்றும் 51ஆவது படையணி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பெருமளவு பொது மக்களும் கலந்துகொண்டனர். (10-117)


**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
அர்ஜுன, லாராதத்தா ரகுவரன், விவேக் நடித்த
அரசாட்சி
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
பு.இ.நே. 10.30, 2.30, 6.30, 9.30 (36364)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிப்பில்
மதுர
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
6 ஆம் திகதி முதல் ஜோர்
(C-37740)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
தனுஷ், சாயாசிங் நடித்த
திருடா திருடி (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு
MEET THE PARENTS இரவு 8.45 (பு.நே.)

**சிற்றி சினிமா பண்டத்தரிப்பு**
சூரியா, லைலா, ராஜ்கிரன் நடித்த
நந்தா
(ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி: 3.00, 7.00 மணி
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)


# மரண அறிவித்தல்

## அருளானந்தம் எட்வேட் தர்மராஜா

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் எட்வேட் தர்மராஜா அவர்கள் (02.10.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரி றெமிலியா (ஜேனி - ஆசிரியை, சில்லாலை றோ.க.த.க.பா.)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற R.S அருளானந்தம் - மகேஸ்வரி தம்பதிகளின் மகனும், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற மரியதெரேசா தம்பதிகளின் மருமகனும் புனிதவதனி இராஜேந்திரக்குமார், ஜோர்ஜ் ஜெயராஜா (நோர்வே), அன்ரன் யோகராஜா ஆகியோரின் சகோதரரும் ஜெறாட் ஜேன்சன் (கனடா), றுவினா றேனி (கொழும்பு), யூபேட் யோண்சன் ஆகியோரின் மைத்துனரும் கலா (கனடா), வீலிக்ஸ் பாஸ்கல்சுரேஸ்வரன் (கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2004) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெற்கு ஒழுங்கை,*
*சில்லாலை.*
(37176)(16-17-30)

தகவல்:
ஜேனி (மனைவி)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு கிருஷ்ணபிள்ளை

துன்னாலை தெற்கு, குருக்கட்டைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு, 'துவாரகை'யை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் பருத்தித்துறை மக்கள வங்கி கதிர்காமநாதனின் பாசமிகு தந்தையும் உமா கதிர்காமநாதனின் அன்பு மாமனாரும் துவாரகா, கிருஷாந், துஷாரகா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் அமரர்களான பொன்னையா, சீனித்தம்பி, முத்துப்பிள்ளை, லட்சுமிப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் சகோதரரும் அமரர் செல்வராசாவின் (ஆசிரியர்) சகலனும் அமரர் சுபாரத்தினம், சோதிடர் நவரத்தினம், சரஸ்வதி செல்வராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சந்திரலிங்கம் (ஜேர்மனி), ஆனந்தலிங்கம் (கனடா), றஜனி, ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), சோதிலிங்கம் (ஆசிரியர், பிஷப்ஸ் கல்லூரி, கொள்ளுப்பிட்டி), அட்ஜெயலிங்கம் (ஆசிரியர், வல்வெட்டி இ.த.க.பா), குமரலிங்கம் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), தர்மரத்தினம் (இ.போ.ச), அழகரத்தினம், கனகரத்தினம், விஜயராசா, லதா, கலாநிதி (ஹொலண்ட்), மாலா, இன்பவடிவேல் (ஜேர்மனி), ஹேமா, ஆனந்தராசா (லண்டன்), நவராஜா (TRAINEE, PAN ASIA BANK, COLOMBO) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2004) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ராஜதாரகை'*
*அல்வாய்* (சி-37988)(13-16-30)

தகவல்:
செ.அட்ஜெயலிங்கம்.

## தங்கரத்தினம் கதிர்காமநாதன்
### (அப்புலிங்கம் இத்தினி)



தட்டாதெரு, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தங்கரத்தினம் கதிர்காமநாதன் அவர்கள் (02.10.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் (ராசன்), பத்மராணி, சின்னராசா, சத்தியராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார், கமலராணி, சுகுமார் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தட்டாதெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.
(37175)(16-17-30)

## திருமதி மகமாசியம்மா தில்லைநடராசா

'புஸ்ப வாஸா' கே.கே.எஸ். வீதி, வல்வையைச் சேர்ந்த திருமதி மகமாசியம்மா தில்லைநடராசா அவர்கள் 02.10.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கரத்தினம் - சிவசாமி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமித்துரை (I), யோகசுந்தரம் (I), உத்தரேஸ்வரியம்மா (I) ஆகியோரின் சகோதரியும் சந்திரவதனி, விஜயகுமாரி, ராசேந்திரகுமார் (கனடா), ஜெயக்குமார் (கனடா), சூரியவதனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வேல்முருகன், தங்கவேல், முகுந்தன் (கனடா), ஜெயலட்சுமி (கனடா), நவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் அமுதா, ஆனந்தரூபா, சிவராம், சிவஞானம், சிவகுமார், பிரசாந், ஜெயகாந், சினேகா, வனுஷன், மதுமிசா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வை ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'புஸ்ப வாஸா',*
*கே.கே.எஸ். வீதி, வல்வை.*
T.P.: 021 2263395, 0776 315972, 0777 649955.

தகவல்:
குடும்பத்தினர்.
(சி-37986)(30-16-17)

## சரவணமுத்து முத்துக்குமார்
### (ஓய்வுபெற்ற அதிபர்)



விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும் கட்டாடு வயல், இலுப்பைக்கடவையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து முத்துக்குமார் அவர்கள் (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்) 02.10.2004 சனிக்கிழமை அன்று நுணாவில் மத்தி, சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு.திருமதி சரவணமுத்து தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற குமாரசாமி, தேவதாஸன் (ஜேர்மனி), பாலேஸ்வரி, சந்திராதேவி, (G.S.), இந்திராதேவி (லண்டன்), செல்வரதி, மங்கையர்க்கரசி (வங்கி முகாமையாளர்), சாந்தினிதேவி (ஜேர்மனி), கனகேஸ்வரி, தேவகாந்தன் (லண்டன்), சுமித்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விசாலாட்சி (கனடா), தர்மபூபதி, கந்தவனம் (ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி), சுந்தரலிங்கம் (நூலகர், நகரசபை, சாவகச்சேரி), திருநாவுக்கரசு, மல்லிகாந்தன் (A.I.), செல்வநாதன் (ஜேர்மனி), மரியா (லண்டன்), அருள்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சிவகுமாரி, சிவகலா, லதா, ரூபன், கண்ணன், விஜி, சுதன், துரைசிங்கம், துவாரகன், துஸ்யந்தன், துர்க்கா, பவானி, ஜனகன், கயலினி, பிரசன்னா, சிந்துஜா, சர்மிலா, வினோதினி, கஜன், நிசாந், கானுஜா, நிருஜா, சங்கீதன், கோபிதன், கீர்த்தனா, சௌமியா, செந்தூரன், டெனிக்கா, நிக்கேஸ், அபிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நுணாவிலில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*
(37171)(30-16-17)

தகவல்:
மருமகன் தாமோதரம்பிள்ளை கந்தவனம்
மகன்: முத்துக்குமார் தேவகாந்தன்.

# பஸ்ஸில் சென்ற இளைஞனை இறக்கி மன்னாரில் பலமாகத் தாக்கியது ஒரு குழு

மன்னார் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர் ஒரவர் இனந்தெரியாதோரால் பஸ்ஸிலிருந்து கீழே இறக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பகல் 11 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

தாக்கப்பட்டதில் பலத்த காயங்களுக்குள்ளான முகம்மது ஜாபிர் என்ற இளைஞர் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்அனுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மற்றொருவரான மௌலவி அபுபக்கர் என்பவரை இனம் தெரியாத குழு ஒன்று மூன்று மைல் தூரம் நடந்து செல்லுமாறு கட்டாயப்படுத்தியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தெரிவிக்கப்படுவதாவது:

மன்னார் தலைமன்னார் வீதியில் நூர் வீட்டுத்திட்டம் என்ற இடத்தில் வைத்து பஸ்ஸை வழிமறித்துள்ளது ஒரு குழு. பிரயாணிகளை இறக்கி முஸ்லிம்கள் யாரெனக் கேட்டுக் கேட்டு அக்குழு தாக்கியுள்ளது. தாறு மாறான தாக்குதலில் ஜாபிர் என்பவரின் கண் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஜாபிருடன் கூட வந்த வேறு முஸ்லிம்களும் தாக்கப்பட்டனர். அபூபக்கர் மௌவியும் அவமானப்படுத்தப்பட்டு மூன்று மைல் தூரம் கால் நடையாகச் செல்லுமாறு பலவந்தப்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பொலீஸார் இடத்திற்குச் சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை நேற்றுக் காலை பேசாலையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் திறந்திருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளை மூடுமாறும் கட்டாயப்படுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகினறது. (க)

# புலிகள் நிராகரித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களுக்காக நீங்கள் உங்கள் முடிவை மீளாய்வு செய்வீர்கள் என உளப்பூர்வமாக நம்புகின்றேன்.

முதலாவதாக -

விடுதலைப் புலிகளுடன் பரந்த சமாதானப் பேச்சுக்களில் எனது அரசு ஈடுபடுவது உங்கள் கடிதத்தில் தனித்து நீங்கள் முக்கியத்துவப்படுத்திக் காட்டும் இடைக்கால அதிகார சபை ஒன்றை உருவாக்கும் விடயத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

இந்த விடயம் ஆரம்ப கட்டத்தில் ஆராய்ப்படும் அதேசமயம் நிரந்தரத் தீர்வை நாங்கள் எட்டவேண்டுமாயின் பிணக்குகளுக்கு அடிப்படையான காரணங்கள் குறித்தும் கவனிப்பதற்கு பரந்த நிகழ்ச்சித் திட்டத்தையும் நாங்கள் கலந்துரையாடலுக்குக் கொண்டிருக்கவேண்டும்.

இரண்டாவதாக -

தங்கள் தலைமையிலான ஐ.தே.மு. அரசு பேச்சுக்களை முன்னெடுத்து கொண்டிருந்த சமயம் 2003 ஏப்பிரலில் பேச்சு மேசையிலிருந்து வெளியேறிய தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை எனது அரசு மீள ஆரம்பிக்கும் என்று நாம் திடமாக உறுதிகொடுத்துள்ளோம்.

பேச்சிலிருந்து புலிகள் வெளியேறுவதற்குக் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நாங்கள் புலிகளோடு தீவிர கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கின்றோம்.

சமாதானத்திற்கான தேசிய கலந்துரையாடலுக்குரிய எனது அழைப்பை அத்தகைய கலந்துரையாடல் இப்போது அவசியமில்லை என்று தெரிவித்து அதனை நிராகரித்து, அக் கலந்துரையாடலில பங்குபற்றுவதில்லை என்று தாங்களும் தங்களது ஐ.தே.கட்சியினரும் தீர்மானித்துள்ளீர்கள்.

அத்தோடு புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை மற்றும் தங்களின் ஐ.தே.மு. அரசின் ஜூன் 2003 பிரேரணை ஆகிய இரண்டு யோசனைகளின் அடிப்படையிலும் புலிகளோடு உடனடியாக நேரடிப் பேச்சை ஆரம்பிக்குமாறும் கேட்டுள்ளீர்கள். உங்கள் முன்மொழிவு எனக்கு ஆச்சரியத்தைத் தந்துள்ளது.

உங்களின் யோசனைகளைப் பல தடவைகள் திரும்பத் திரும்ப புலிகள் பலமாக நிராகரித்துள்ள நிலயில், இந்த இரண்டு யோசனைகளின் அடிப்படையில் எனது அரசு புலிகளோடு பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென நீங்கள் எதிர்பார்ப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

2003 ஜூன் 4ஆம் திகதி அன்ரன் பாலசிங்கம் உங்களுக்கு எழுதிய கடிதத்தைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். *"எங்களால் (விடுதலைப் புலிகளால்) எழுப்பப்பட்ட மைய விவகாரத்தை கவனிக்க நீங்கள் தவறிவீட்டீர்கள"* என்று தெரிவித்த அவர் மேலும் *"உங்கள் முன்மொழிவுகள் திருப்தி தரக்கூடியவையல்ல என்பதோடு அதனால் அவை ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாதவை என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் கவலையோடு தெரிவிக்கிறது."* என்றும் தெரிவித்துள்ளார்.

திரு.பாலசிங்கம் மேலும் *"தேர்தலின்போது நீங்கள் அளித்த உறுதிமொழிப்படி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றையே விடுதலைப் புலிகள் இயக்கம் கோருகிறது... உங்கள் அரசு மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளையும் அதிகாரங்களையும் கொண்ட அபிவிருத்திக் கட்டமைப்பையே பிரேரிக்கின்றது"* என்றும் அதனால்அதனை *'திருப்தி தராததும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும்"* என்றும் விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள் என அவர் கூறுகிறார்.

இந்தக் கருத்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 2003 நவம்பர் மாவீரர் தின உரையிலும் திட்டவட்டமாக - பலமாக - உறுதிப்படுத்தப்படுகிறது. அதில் அவர் *"இடைக்கால சபை ஒன்றுக்காக அரசினால் ஒன்றன்பின் ஒன்றாக சமர்பிக்கப்பட்ட மூன்று யோசனைகளும் திருப்தி தராதவை, ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பதால் புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளன"* எனத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டது என உங்களுக்கு நன்கு தெரிந்த ஒரு விடயத்தின் அடிப்படையிலேயே புலிகளுடன் பேச்சைத் தொடங்குமாறு நீங்கள் எனக்கு ஆலோசனை கூறுகிறீர்கள் என்பது இதனால் தெட்டத்தெளிவாகின்றது.

எனவே நேர்மையானதும் செயற்படக்கூடியதுமான ஆலோசனைகளை உங்கள் முன் வைப்பதற்கு என்னை அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

புலிகளோடு பேச்சைத் தொடங்குவதற்கோ-

புலிகளோடு பேச்சை மீளத் தொடங்குவதற்கும், தொடர்வதற்குமான முடிவை எடுப்பதற்குத் தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலைப் பொறுப்பாக்குவதற்கோ -

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலில் ஓர் உடன்பாட்டைக் கோரவேண்டும் என்று நான் முன்நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறேன்.

புலிகளோடு கலந்துரையாடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அரசுக்குத் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஓர் ஆலோசனை சபை வாய்ப்பை வழங்கும். அத்தோடு ஒருபுறம் நாட்டுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் தொடர்ந்து சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றித் தெரிவிக்கும் அதேசமயம், நாட்டின் கருத்தை - பிரதானமாக அதன் அரசியல் பிரதிநிதிகள், அதேசமயம், மதத் தலைவர்கள் மற்றும் அக்கறையுள்ள பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்தை - அரசும் மறுபுறத்தில் பெறமுடியும்.

வடக்கு - கிழக்கு பிணக்குக்குத் தீர்வு காணும் அரசின் பொறுப்பிலிருந்து தப்பி ஓடுவதற்காக இந்த ஆலோசனை சபையின் நடவடிக்கைகளை எந்த வகையிலும் நாம் பயன்படுத்தமாட்டோம்.

இறுதியாக-

புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலில் பங்குபற்றுவது என்ற உங்களின் இந்த முடிவு -

நாட்டின்முன் தற்போதுள்ள மிக முக்கியமான விடயத்தில் -

எங்களுடைய அண்மைக்காலச் சரித்திரத்தில் அதற்குத் தீர்வுகாண்பதற்கு உண்மையான, வெளிப்படையான ஒரு முயற்சியை இந்த அரசு ஆரம்பித்துள்ளதாக நான் உளப்பூர்வமாகக் கருதும் இச்சமயத்தில் -

பெறுமதியான ஆலோசனைகளைத் தருவதிலிருந்து உங்கள் கட்சியை வேண்டுமென்றே விலக்கச் செய்துள்ளது.

இந்த நாட்டின் மிகப்பெரிய கட்சிகளான ஐ.தே.கவையும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும் தேசிய நலனின் அடிப்படையில் - குறிப்பாக இனப்பிரச்சினை விடயத்தில் - ஒன்றுபட்டுச் செயற்படச் செய்வதற்காகக் கடந்த 10.ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகளை நான் எடுத்து வந்திருக்கிறேன் என்பதையும் - என்னுடைய ஒவ்வொரு யோசனைகளும் ஐ.தே. கட்சியால் நிராகரிக்கப்பட்டதால் - இந்த முயற்சிகள் தோல்வியுற்றன என்பதையும் - நாடே அறியும்.

இந்தக் காரணங்களினால், நீங்கள் இந்த விடயங்களை உங்கள் கட்சிக்குத் தெரிவித்துத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த முயற்சியில் உங்கள் கட்சியையும் பங்குபற்றச் செய்யும் ஓர் இணக்கத்துக்கு வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-13)

பொருளியல்
PAPER CLASS
A/L 2005, DAY CLASS
ஆரம்பம்:04.10.2004 6.30 a.m. (ப.நே.)
திங்கள் முதல் வெள்ளிவரை
6.30-7.30 (ப.நே.)
By.S.ஜெயகுமார் (B.A.(Hons.) Eco.Spl.)
ஐடியல் சண்டிலிப்பாய்
(37153)

# மதுபானச்சாலையை அகற்றுமாறு மக்கள் முறையீடு

யாழ். டேவிட் வீதி - பாங்ஷால் - வீதி ஆகியன இணையும் சந்தியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மதுபாசனச்சாலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆயர் மற்றும் அரசியல் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புகள் அதிகமாக உள்ள மேற்படி சந்திப் பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலையால் சமூகப் பிறழ்வுகள் பல ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு மேற்படி பொது மக்கள் நேற்று ஒன்றிணைந்து சென்று இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர். இது விடயமாக தாம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்த மகஜர்களையும் இவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.(10-13)

# மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ளக்கூடாது என இந்த அச்சுறுத்தலை விடுத்த நபர் தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜெயானந்தமூர்த்தி எம்.பிக்கும் இவ்வாறு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10)

# அரசாங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை சர்வதேச சமூகம் மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுள்ளது. ஆனால், ஸ்ரீலங்கா அரசு அதனை ஏற்றுக்கொள்ளாது பல்வேறு காரணங்களைக் காட்டி பேச்சுக்களை இழுத்தடித்துச் செல்கின்றது.

அதுமட்டுமல்லாது, ஸ்ரீலங்கா அரசு, வெளிவிவகார அமைச்சர் மற்றும் இராஜதந்திரிகள் மூலம் சர்வதேச மட்டத்தில் எமது அமைப்பை தீவிரவாத இயக்கம் என்றும், புலிகள் பேச்சு மேசைக்கு வரமாட்டார்கள் என்றும் பிரசாரம் செய்து வருகின்றது. இவை விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச ரீதியில் பயங்கரவாத இயக்கம் என முத்திரை குத்த எடுக்கப்படும் முயற்சிகளாகும்.

இந்தப் பிரசாரத்தை முறியடித்து நியாயபூர்வமான - மக்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டத்தின் நியாயப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காகவே எமது அரசியல் குழு சர்வதேச நாடுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

அரசு தற்போது தேசிய நல்லிணக்க ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. காலத்தை இழுத்தடித்து இராணுவச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி பாரிய யுத்த நெருக்கடியை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகத்தான் இதனை நாம் கருதுகின்றோம்.

இதனால்தான் அரசின் இந்த சதி முயற்சியை சில அரசியல் கட்சிகள் நிராகரித்துள்ளன என்றார்.

முன்னதாக, காலை 10.30மணியளவில் பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ், அகவொளி நிலையத்தைச் சேர்ந்த வண.பிதா இராஜநாயகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியினை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியும் ஈகச் சுடரினை மாவீரர்களான லெப்.கவிவேந்தன், கீர்த்தி ஆகியோரின் சகோதரியும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அரங்கில் வைக்கப்பட்டிருந்த 2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப் படத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மலர் மாலை அணிவித்தார்.

முன்பள்ளி இணைப்பாளர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா நிகழ்த்தியதைத் தொடர்ந்து அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், கி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து 'நற்பிரஜைகளை உருவாக்குவதில் பெண்களின் பங்கு' எனும் தலைப்பில் அகவொளி நிலைய இயக்குநர் வண.பிதா இராஜநாயகம், 'சமூக அபிவிருத்தியில் பெண்களின் பங்கு' எனும் தலைப்பில் அகதிகள் புனர்வாழ்வுக் கழக பெண்கள் விவகார இணைப்பாளர் செல்வி ஜெயந்தி, 'யாழ்.சமூகத்தில் பெண்களின் தீர்மானம் எடுக்கும் ஆற்றலின் -கல்வியின் முககியத்துவம்' எனும தலைப்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோரின் கருத்துப் பகிர்வும் இடம்பெற்றன. தொடர்ந்து பெண்கள் பண்பாட்டு மையத்தினரின் அரங்காற்றுகை நிகழ்வு இடம்பெற்றது. (எ-5-203)

ஈசன்
கல்வி நிலையம்
CHEMISTRY
A/L 2005
PHYSICAL
CHEMISTRY
Tue., Thu.:6.30a.m.
ஆரம்பம்: 05.10.2004
அசேதன இரசாயன
வினாவிடை
Wed.6.30-7.30,
Thu: 3.00-4.00 p.m.
ஆரம்பம்:06.10.2004
திரு: அன்பழகன்
(B.Sc.) (37173)

# காமினி பொன்சேகாவின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

கொழும்பு,ஒக்.4

வடக்கு- கிழக்கு மாகாண முன்னாள ஆளுநரும் புகழ்பெற்ற நடிகருமான அமரர் காமினி பொன்சேகாவின் இறுதிக் கிரியைகள் நேற்று கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட இந்த இறுதி நிகழ்வில் ஜனாதிபதி அனுப்பி வைத்த அனுதாபச் செய்தியினை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க வாசித்தார்.

பின்னர் அங்கு பல கலைஞர்கள் அஞ்சலியுரைகளை நிகழ்த்தினர்.

இறுதியாக பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (எ-13)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியிடும் வகையில் நேற்று மாலையில் ஊடக அறிவித்தல் ஒன்று வெளியாகுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

அந்த ஊடக அறிவித்தல் பற்றிய தகவல்களோ - நேற்று சொல்ஹெய்மோடு புலிகளின் உயர்மட்டக் குழு நடத்திய பேச்சுக்களின் விவரங்களோ- இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கவில்லை.

இதேவேளை -

ஜெனீவா சென்றடைந்துள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் குழு நேற்று விடுதலைப் புலிகளின் உயர்மட்ட குழுவுடன் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக கலந்துரையாடியுதாகக் கூறப்பட்டது. (எ-க)

# சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐநூறு பயணங்களுக்காக ஆயிரத்து இருநூற்றெழுபது மணித்தியாலங்கள் பறந்துள்ளன.

இதுவரை காலமும் பெல் 212, பெல் 4[illegible] மற்றும் எம்.ஐ. 17 ஆகிய ஹெலிகள் சமாதானப் பயணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அதற்கான செலவுகள் யாவும் பயிற்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்றே பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

# எதிர்க்கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல் என்று சுட்டிக்காட்டியுள்ள அக்கட்சி இந்தக் கூட்டத்தை அடியோடு நிராகரித்துவிட்டது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபின் அடிப்படையில் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மட்டுமே ஆதரவு தெரிவிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெரிவித்துவிட்டது.

இந்தக் கூட்டம் குறித்துத் தமக்கு சந்தேகங்கள் சில இருப்பதால் அவை நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது. எனவே அந்தக் கட்சியும் பெரும்பாலும் கூட்டத்தில் கலந்துகொள்ளாது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதானால் தமது கட்சி விதிக்கும் 3 நிபந்தனைகளுக்கு புலிகளை அரசு இணங்க வைக்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியிடம் இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை. எனவே அந்தக் கட்சியும் கூட்டத்தில் பங்குபற்றுவது சந்தேகத்துக்குரியதே.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துவிட்டன.

இந்த நிலையில் இன்று கூடும் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமே பங்கேற்கவுள்ளன.

இதனால், சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசுக்குள் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்கவே இந்தக் கூட்டம் வழிவகுக்கும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (எ-க)

CHEMISTRY நாவலர், ஆனைப்பந்தி
அவத்தைச் சமநிலை
Tue., We.,Th 6.30 a.m.
DIAS B.Sc. (Hons.) Spl. in Chem.
(37146) ஆரம்பம்: 05.10.2004

ENGLISH CLASSES
Lectured By:
S.B.Sasi
புதிய பிரிவுகள் ஆரம்பம்:-06.10.2004
நேரம் :- 03.30 pm
இலகு வழியில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
NEW HARY'S INSTITUTE
Tellipalai Road, Vaddukoddai

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.